பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 20 செவ்வாய்க்கிழமை 08.10.2019 கதிர் 337

### இனிது ரகசியம் அல்ல!

நினைவுப் பரிசுகள் என்பன சிறிய விடயம் அல்ல. அவை உணர்வுபூர்வமாக அமையதக்கன. காலம் காலமாக மனதை நெருடும் உணர்வு கொண்டவையாக அவை விளங்கக் கூடியன.

தொன்னூறுகளின் கடைசியில் எனக்கு ஓர் பக்கம் 02

# சஜித், கோட்டாபய, அநுர உட்பட 35 பேர் நேற்று வேட்புமனு தாக்கல்

## ஜனாதிபதித் தேர்தல் சமர் ஆரம்பம்





கொழும்பு, ஒக். 08

ஜனாதிபதித் தேர்தலுக்காக நேற்றுத் தாக்கல் செய்யப்பட்ட 35 பேரின் வேட்புமனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

நவம்பர் மாதம் 16ஆம் திகதி நடைபெறவுள்ள எட்டாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்றுக் காலை 9 மணி முற்பகல் 11 மணி வரையான காலப் பகுதியில் இராஜகிரியவிலுள்ள தேர்தல் ஆணைக்குழுவில் நடைபெற்றது. பக்கம் 03

# ஜனாதிபதித் தேர்தலில் ஒருமித்த முடிவுக்காக தமிழ்க் கட்சிகளிடமிருந்து முன்மொழிவுகள்!

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திடம் சமர்ப்பிப்பு அவற்றைத் தொகுத்து வியாழனன்று வெளியிடத் தீர்மானம்

*(எஸ்-நிதர்ஷன்)*

யாழ்ப்பாணம், ஒக். 08



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமது தரப்பு முன்மொழிவுகளை தமிழ்த் தேசியக் கட்சி கள் நேற்று யாழ், பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்திடம் கையளித்தன.

ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சி களின் நிலைப்பாட்டை அறியும் இரண்டாம் சுற்றுப் பேச்சு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது. பக்கம் 03

## சஜித்துக்கு நேற்று அமோக வரவேற்பு

### இராஜகிரியவில் திரண்டது மக்கள் வெள்ளம்



கொழும்பு, ஒக். 08

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்றுத் தனது பக்கம் 03

## தேர்தல் சட்டங்கள் கடுமை மீறுவோர் மீது நடவடிக்கை

### தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் அறிவிப்பு



கொழும்பு, ஒக். 08

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட 35 பேர் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளனர். தேர்தல் சட்டங்களை மீறுவோர் – தேர்தலில் அரச ஆதனங்களைப் பயன்படுத்து பக்கம் 03

## ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பால் ரயில்வேக்கு 19 கோடி ரூபா இழப்பு

கொழும்பு, ஒக். 08

ரயில்வே ஊழியர்கள் தொடர்சியாக 12 நாள்கள் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தால் ரயில்வே திணைக்களத்துக்கு 19 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. பக்கம் 03

## விலகினார் வெல்கம!



கொழும்பு, ஒக்.

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிடுவதற்கு கட்டுப்பணம் செலுத்தியிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பக்கம் 03

## சமல் ராஜபக்ஷவும் போட்டியிடவில்லை



கொழும்பு, ஒக். 08

ஸ்ரீலங்கா பொதுஜன கூட்டணியின் சார்பில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்திய முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவும் வேட்புமனுத் தாக் பக்கம் 03

## போட்டிக் களத்தில் உள்ள 35 வேட்பாளர்கள் விவரம்!

கொழும்பு, ஒக். 08

இலங்கையின் எட்டாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 35 வேட்பாளர்களின் இறுதிப் பட்டியல் தேர் பக்கம் 03

## சிவாஜிலிங்கத்தின் முடிவு ரெலோவின் தீர்மானமல்ல

### அவர் மீது நடவடிக்கை என்கிறார் செல்வம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 08

ஜனாதிபதித் தேர்தலில் எங்கள் கட்சியின் உறுப்பினரான எம்.கே. சிவாஜிலிங்கம் போட்டியிடுவதற்கும் கட்சிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. அவ்வாறு தேர்தலில் பக்கம் 03

# வவுனியாப் பொலிஸாரினால் சஜித்தின் சுவரொட்டி கிழிப்பு



ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரான முன்னாள் அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் சுவரொட்டிகள் வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இடங்களில் நேற்று அகற்றப்பட்டன.

'புதிய இலங்கைக்கு சஜித்' எனும் பெயரில் வவுனியாவில் பரவலாக இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. இந்தச் சுவரொட்டிகளை நேற்று மாலை வவுனியா பொலிஸார் நடமாடும் பொலிஸாரின் வாகனத்தில் சென்று கிழித்தெறிந்தனர். (ஜ-100)

# ரயில்வே ஊழியர்களின் புறக்கணிப்பு முடிவுக்கு

ரயில்வே ஊழியர்கள் தமது பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரத் தீர்மானித்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நேற்று நண்பகல் இடம்பெற்ற சந்திப்பை அடுத்து இந்த முடிவுக்கு வந்துள்ளதாக ரயில்வே தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் ரயில் சேவைகள் நேற்று மாலை முதல் வழமைக்கு திரும்பும் என எதிர்பார்க்கப்பட்டது.

சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ரயில்வே இயந்திர இயக்குநர்கள், கட்டுப்பாட்டாளர்கள், பாதுகாவலர்கள் உள்ளிட்டோர் கடந்த 12 நாள்களாக தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாருக்கு ஆதரவளிப்பது? தொண்டா இன்று முடிவு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவை வழங்குவது என்பது குறித்து இன்று தீர்மானம் எடுக்கிறார் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் எம்.பியுமான ஆறுமுகம் தொண்டமான்.

காங்கிரஸின் தேசிய சபைக் கூட்டம் இன்று ஹற்றனில் நடக்கவுள்ளது. அந்த கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

முன்னதாக ஜனாதிபதி வேட்பாளர்களான சஜித் பிரேமதாஸ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருடன் பேச்சு நடத்தியிருந்தார் ஆறுமுகம் தொண்டமான். அந்தப் பேச்சுக்களின் அடிப்படையில் இன்று இறுதி முடிவெடுக்கப்படவுள்ளது.

இன்று கூடும் காங்கிரஸின் தேசிய சபை இறுதி முடிவை எடுப்பதற்கான அதிகாரத்தைக் கட்சித் தலைவருக்கு வழங்குமெனக் கூறப்பட்டது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுபவம் நேர்ந்தது.

அது சந்திரிக்காவின் ஆட்சிக் காலம். யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்த இலங்கை அரசுத் துருப்புகள் சுமார் ஆறு ஆண்டு காலத்தின் பின்னர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியிருந்தன.

யாழ்ப்பாணத்திலிருந்து அப்போது வெளிவந்து கொண்டிருந்த ஒரேயொரு பத்திரிகையின் ஆசிரியன் நான். அதனால் பெரும் சர்ச்சைகளில் அடிக்கடி மாட்டிக் கொண்டிருந்தேன்.

சுருக்கமாகச் சொல்வதானால் அரசுத் தலைமையும், அரசுப் படைகளும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் செயற்படும் ஒரு 'புலி' போல என்னைப் பார்த்த காலம் அது. அவர்களின் பார்வையில் நான் ஒரு வில்லனாக – வில்லங்கமானவனாக – இருந்தேன்.

சுமார் பத்து ஆண்டு காலத்தின் பின்னர் 1999 இல் முதல் தடவையாகக் கொழும்புக்குச் செல்லும் வாய்ப்புக் கிட்டியது. அப்போது வன்னிப் பெரு நிலப்பரப்பு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. பருத்தித்துறையிலிருந்து திருகோணமலை வரை கப்பலில் பயணம். அங்கு உறவினர் வீட்டில் சற்று ஓய்வு எடுத்துக் கொண்டு மாலை ஒரு ஏழு மணியளவில் கொழும்பில் சகோதரி வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன். ஆயசமாக இருந்ததால் நேரத்துடன் தூக்கத்துக்குப் போகலாம் என்றிருந்தேன்.

வாசலில் அழைப்புக் கேட்டது. என்னை யாரோ தேடி வந்திருக்கின்றார்கள் என்றனர். எனக்கு சற்றுப் பயம் தொட்டது. யாழ்ப்பாணத்துப் படைக் கெடுபிடி கொழும்புக்கும் வரும் என எதிர்பார்த்தேன். ஆனால் அவ்வளவு சீக்கிரமாக வரும் என நான் எதிர்பார்க்கவில்லை.

சமாளிக்கலாம் என்ற தைரியத்துடன் வாசல் பக்கம் வந்தேன்.

வெள்ளையும் சொள்ளையுமாக ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவருக்கு இரண்டு உதவியாளர்கள் பக்கத்தில். அந்தப் பிரமுகரை எனக்குத் தெரியவில்லை.

அவர் என்னுடைய பெயரை, எனது பத்திரிகையின் பெயர் சொல்லி அதன் ஆசிரியர் என்று குறிப்பிட்டு அழைத்தார்.

நான் பதிலுக்கு 'ஹலோ' சொல்லி வைத்தேன்.

அவருக்கு விளங்கி விட்டது – அவரை அடையாளம் தெரியாமல் நான் தடுமாறுகிறேன் என்பது. எனவே தானே தன்னை அறிமுகப்படுத்தினார்.

“நான் ஐ.தே.கட்சி எம்.பி. ஜயலத் ஜயவர்த்தனா!” – என்றார் அவர்.

எனக்குப் பேராச்சரியமாய்ப் போய்விட்டது. அந்தக் காலகட்டத்தில் கொழும்பில் தமிழர்களுக்காகக் குரல் எழுப்பிக் கொண்டிருந்த ஒரே சிங்களவர் அவர் தான்.

ஹோலுக்கு அழைத்து வந்து உரையாடினேன்.

கையில் அவர் ஒரு சிறிய பரிசுப் பொருள் கொண்டு வந்திருந்தார். அதை அன்பளிப்பாக எனக்குத் தர முற்பட்டார். நான் அதைப் பெறுவதற்குப் பின்னடித்தேன்.

*“இது கையூட்டு அல்ல. அர்த்தமுள்ள ஒரு நினைவுப் பரிசில். அதை திறந்து பாருங்கள். அதன் விலை பெறுமதி குறைவு. ஆனால் அர்த்தங்கள் அதிகம்.”* – என்று லாவகமான ஆங்கிலத்தில் சொன்னார் அவர்.

அவருக்கு முன்னாலேயே அதைப் பிரித்தேன். மெழுகுவர்த்தி ஏற்றும் சிறிய ஸ்டாண்ட் அது.

"We together light the life of the Tamils" (நாங்கள் ஒன்று சேர்ந்து தமிழர்களின் வாழ்வில் ஒளியேற்றுவோம்) – என்றார் அவர். எனது நெஞ்சைத் தொட்டன அவர் வார்த்தைகள்.

இறக்கும் வரை தெற்கில் தமிழர்களுக்காக குரல் எழுப்பிய ஜீவன் அவர். அந்த நினைவுப் பரிசில், காணும் போதெல்லாம் என் மன உணர்வை நெருடத் தவறுவதில்லை.

இனி விடயத்துக்கு வருகிறேன்.

கடந்த வாரம் ஒரு நினைவுப் பரிசில் வழங்கும் படத்தைப் பார்த்த போது வேதனையாக இருந்தது.

2013 செப்ரெம்பரில் வடக்கு மாகாண முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டார் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய அவர், கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் முன்னிலையில் முதலமைச்சராகச் சத்தியப் பிரமாணம் செய்வார் எனப் பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் அவர் அதிரடியாக – திடீரென – ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் முதலமைச்சராகச் சத்தியப்பிரமாணம் செய்தார்.

அவர் அப்படித் தம்மிடம் வந்து சத்தியப் பிரமாணம் செய்வார் என்று மஹிந்தரே எதிர்பார்த்திருக்கவில்லை. மஹிந்தருக்கு ஆச்சரியமாகவும் எதிர்பாராத விவகாரமாகவும் அது இருந்தது. விக்னேஸ்வரனின் அந்தச் செயலைத் தாம் மதிக்கிறார் என்பதை அவருக்கு உணர்த்தும் விதத்தில் ஒரு நினைவுப் பரிசிலை அளிக்க விரும்பினார் மஹிந்தர். நீதியரசர் விக்னேஸ்வரனின் மனதை அந்த நினைவுப் பரிசில் தொட வேண்டும் என்றும் மஹிந்தர் ஆசைப்பட்டார்.

என்ன பரிசு கொடுத்தார் தெரியுமா?

தமது இல்லத்தில் தமது அலுமாரியில் மிக மதிப்புடையதாய்த் தாம் போற்றும் விநாயகர் சிலை ஒன்றை அப்படியே எடுத்து வந்து முதல்வர் விக்கியிடம் நினைவுப் பரிசாகத் தந்தார் மஹிந்தர்.

வழமையாகவே இந்து – சைவ – நெறியில் முழுப் பற்றாளராக, ஒரு சாமியார் போலவே, வாழும் முதல்வர் விக்னேஸ்வரன் கூட அந்த உயரிய நினைவுப் பரிசிலினால் மனம் சிலிர்த்துப் போனார்.

இது நினைவுப் பரிசில்களின் தாற்பரியம் பற்றி ஒரு சிறு குறிப்பு.

கடந்த வாரம் தமிழ் நாட்டிலிருந்து பிரபல இயக்குநர் பாரதிராஜா யாழ்ப்பாணம் வந்திருந்தார். முன்னரும் இலங்கைக்கு வந்து தலைவர் பிரபாகரனைச் சந்தித்துச் சென்ற உயரிய அனுபவம் கொண்டவர் அவர்.

மரியாதையின் நிமித்தம் வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை அவர் சந்தித்தார்.

நாட்டின் தேசியக் கொடிக்கு முன்னால் நின்றவாறு அவருக்கு ஒரு நினைவுப் பரிசிலை வழங்கினார் நமது ஆளுநர்.

நினைவுப் பரிசு என்ன தெரியுமா?

புத்தர் சிலை...!

இப்போது அரசியலில் சர்ச்சைக்குரியதாக மாறியிருப்பதே அதுதான். புத்தர் மீது இங்கு யாருக்கும் வெறுப்பில்லை. ஆனால் அவரின் சிலை நமது மண்ணில் பௌத்த, சிங்கள மேலாதிக்கத்தின் குறியீடாக மாற்றப்பட்டு வருவதுதான் உணர்வு பூர்வமான விடயம்.

யாழ்ப்பாணத்துக்கு வந்த தமிழகத் தமிழ்ப் பிரமுகர் ஒருவருக்கு – வடக்கின் ஆளுநர் – அதுவும் வடக்கின் முதல் தமிழ் ஆளுநர் என்று மதிக்கப்படுபவர் – நினைவுப் பரிசிலாக புத்தர் சிலையைத் தேர்ந்ததில் பெற்றவருக்கும் அளித்தவருக்கும் மன நெருடல் ஏதும் ஏற்பட்டிருக்குமோ தெரியவில்லை.

ஆனால், அது, தங்களின் சார்பாக அளிக்கப்பட்ட நினைவுப் பரிசில் என்று கருதும் யாழ்ப்பாண மக்களுக்கு, பரிசிலாக அச்சிலை தெரிவு செய்யப்பட்டமை மனதை நெருடியிருக்கும் என்பது நிச்சயம்.

★ ★ ★

முல்லைத்தீவு, செம்மலை, நீராவியடிப் பிள்ளையார் ஆலயச் சுற்றாடலில் நீதிமன்ற உத்தரவை மீறி, அதை அவமதிக்கும் விதத்தில் பிக்கு ஒருவரின் உடலை தகனம் செய்து விட்டு, அதைப் புரிந்து அடாவடித்தனம் பண்ணிய பிக்குகள் தம்பாட்டுக்கு அங்கிருந்து புறப்பட்டு விட்டனர்.

நமது அரசியல்வாதிகளும் தம்பாட்டு ஆர்ப்பாட்டம், அதிரடி அறிக்கைகள், கண்டன அறிவிப்புக்கள் எல்லாம் நடத்தி விட்டு அடங்கிவிட்டனர்.

நாங்களும் – பத்திரிகைகாரர்கள், ஊடகவியலாளர்கள் போன்றோரும் – எங்கள் பங்குக்கு ஓங்கி, ஒலித்து, கண்டித்து கட்டுரைகள், அறிக்கைகள், செய்திகள், ஆசிரிய தலையங்கங்கள் எல்லாம் வெளியிட்டு, பிரசுரித்து ஓய்ந்து விட்டோம்.

குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை? யார் எடுப்பது?

வழமைபோல விவகாரத்தைத் தம் கையில் – தோளில் – எடுத்திருக்கின்றார் கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன்.

நீதிமன்ற அவமதிப்பு, அந்த நீதிமன்ற வளாகத்துக்குள் நடந்தால்தான் அதே நீதிமன்றம் அது குறித்து விசாரிக்க முடியும். அந்த நீதிமன்றத்தின் வளாகத்துக்கு வெளியில் நடந்ததாயின் அது குறித்து மேன்முறையீட்டு நீதிமன்றில்தான் முறையிட்டு நிவாரணம் பெறவேண்டும்.

நீராவியடிப் பிள்ளையார் ஆலய விவகாரத்தில் உடல் தகனம் நீதிமன்ற வளாகத்தில் நடக்கவில்லை. நீதிமன்ற உத்தரவு நீதிமன்றுக்கு வெளியில்தான் மீறப்பட்டுள்ளது. ஆகவே இதற்கு நடவடிக்கை எடுக்கக் கோரும் வழக்கு கொழும்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில்தான் தொடரப்பட வேண்டும்.

கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, மேற்படி முல்லைத்தீவு பிரதேச சபையின் தவிசாளர் ஆகியோரை மனுதாரராகக் கொண்டு இந்த வழக்கைத் தொடர்வதற்கு 'சுமந்திரன் அண்ட் கொம்பனி' சட்டத்தரணிகள் தயாராகி வருகின்றனர் எனத் தெரிகின்றது.

எழுபதுகளின் கடைசியிலும் எண்பதுகளிலும் கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்களுக்காக ஆள் கொணர்வு மனுக்கள் மற்றும் வழக்குகளில் முன்னிலையாவதற்கு கொழும்பில் ஒரு சட்டத்தரணி குழாமே எப்போதும் தயாராக இருந்தது. சட்டத்தரணிகள் சி.வி.விவேகானந்தன், ஜி.குமாரலிங்கம், பேரின்பநாயகம், பாக்கியநாதன், சந்திரகாசன், நவரத்தினம் (கரிகாலன்), கனக.மனோகரன், ஸ்ரீநிவாசன், கே.வி.தவராஜா, உருத்திரமூர்த்தி என்று தொடங்கி சிரேஷ்ட சட்டத்தரணிகளான புள்ளநாயகம், நடேசன் கியூ.ஸி., அவரது மகன் சத்தியேந்திரா, எம்.சிவசிதம்பரம் வரை அந்தப் பட்டியல் மிக நீண்டது.

இப்போது கொழும்பில் பெரும்பாலும் ஆக சுமந்திரன் தலைமையில் ஒரு குழாம். அதேசமயம், பயங்கரவாதத் தடுப்பு வழக்கு விடயங்களைக் கையாளும், தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் கே.வி.தவராஜாவும், அவர் துணைவியாரும் தான் மற்றைய குழாம்.

ஏதோ 'சுமந்திரன் அண்ட் கோ' புண்ணியத்தில் பல வழக்குகள் ஓசியில் நடக்கின்றன. அவ்வளவுதான்.

நேற்றும் ஒரு வழக்கு வந்தது. திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில்.

கன்னியா வெந்நீரூற்று சர்ச்சை சம்பந்தமான வழக்கு.

இந்த வழக்கில் பல இடைக்கால உத்தரவுகளை நீதிமன்றம் வழங்கியிருக்கின்றமை தெரிந்ததே. அதில் ஓர் உத்தரவில் நேற்று நீதிமன்றம் தளர்வை ஏற்படுத்தியது.

மனுதாரர்களின் அங்குள்ள இந்துக் கோயில் தொடர்பாக டிக்கெட் அச்சிட்டு விற்கக் கூடாது என எதிர்மனுதாரர்களான தொல்பொருள் திணைக்களம் மற்றும் தரப்புகளுக்கான தடை உத்தரவை தொடருகின்றது எனத் தெரிவித்துள்ள நீதிமன்றம், எனினும் கன்னியா வெந்நீரூற்றுப் பரிபாலனத்துக்காக, அந்த வெந்நீரூற்றுப் பாவனை தொடர்பில் டிக்கெட் மூலம் நிதி அறவிடுவதற்கு தொல்பொருள் திணைக்களத்துக்கு அனுமதி வழங்கியது.

இந்த வழக்கிலும் சுமந்திரன் சார்பில் அவரது கனிஷ்ட சட்டத்தரணி கேசவன் சயந்தனே நேற்றும் திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் முன்னிலையானார்.

சுமந்திரன் தலைமையிலான சட்டத்தரணிகள் அணியே நிதி வருமான எதிர்பார்ப்பு ஏதுமின்றி, தங்கள் சொந்தச் செலவில் இது போன்ற வழக்குகளை முன்னெடுத்து வருகின்றமையை அந்த அணியை 'சுமந்திரன் அண்ட் கொம்பனி' என்று நாமம் சூட்டிக் குறிப்பிட்டேன். அதுதவறா வாசகரே...?

- மின்னல் -

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தலில் எவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பது, ஜனாதிபதி வேட்பாளர்களிடம் எந்தெந்தக் கோரிக்கைகளை முன்வைப்பது, கோரிக்கைகளை ஏற்றுக் கொள்பவர்களுக்கு எந்த வகையில் ஆதரவளிப்பது என்பன தொடர்பிலேயே நேற்றுத் தமிழ்த் தேசியக் கட்சிகளால் இந்த முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த முன்மொழிவுகள் அனைத்தையும் கையேற்ற மாணவர் ஒன்றியம் அவற்றைத் தொகுத்து இறுதியான வரைவொன்றை தயாரித்து அதனை எதிர்வரும் 10 ஆம் திகதி நடக்கவுள்ள மூன்றாம் சுற்றுப் பேச்சில் வெளிப்படுத்துவதென முடிவாகியிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் ஒருமித்த முடிவை எடுக்கவேண்டுமென்பதற்காக யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் முயற்சிகளை எடுத்துள்ளது. இதற்கமைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேச்சுக்களையும் நடத்தி வருகின்றது. சில தினங்களுக்கு முன்னர் முதலாம் சுற்றுப் பேச்சு நடைபெற்றது. நேற்றுத் திங்கட்கிழமை இரண்டாம் சுற்றுப் பேச்சு முடிவடைந்திருக்கிறது.

இதன்போது பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகளின் நிலைப்பாடுகள் அடங்கிய முன்மொழிவுகளை நேற்றைய கூட்டத்தில் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்வைத்திருக்கின்றனர்.

இந்த முன்மொழிவுகளை யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமே இறுதி செய்து எதிர்வரும் 10 ஆம் திகதி அடுத்த சந்திப்பில் – சுற்றுப் பேச்சில் – வெளிப்படுத்தி கலந்துரையாடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின், தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இச் சந்திப்பு தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் எஸ்.பபில்ராஜ் –

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒருமித்த முடிவை எடுக்கவேண்டுமென்ற நோக்கோடு வடக்கு – கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்கள் இணைந்து தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகளுடன் கலந்துரையாடல்களை நடாத்தி வருகின்றன.

இதற்கமைய முதலாம் சுற்றுப் பேச்சு ஏற்கனவே நடைபெற்று முடிவடைந்துள்ளது. தற்பொது இரண்டாம் சுற்றுப் பேச்சை நடத்தியிருக்கின்றோம். இந்தச் சந்திப்புக்கள் ஆக்கபூர்வமான முறையில் முன்நகர்ந்து வருகின்ற நிலையில் அடுத்த சந்திப்பையும் எதிர்வரும் 10 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு தொடர்ச்சியான பேச்சுக்கள் மூலம் நிலைப்பாடுகள் உறுதி செய்யப்பட்டு இறுதியாக நாம் ஒருமித்த முடிவை எடுப்போம் என்று நம்புகின்றோம். ஏனெனில் அடுத்த கட்ட நகர்வுகள் தொடர்பாகத் தொடர்ந்தும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவதெனக் கட்சிகளுக்கிடையே இணக்கப்பாடும் ஏற்பட்டுள்ளன – என்றார்.

இந்தப் பேச்சில் பங்கேற்ற ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவிக்கையில் –

எங்கள் கோரிக்கைகள் எவ்வாறானதாக இருக்கவேண்டும். எவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்து தேர்தலில் போட்டியிடுபவர்களுடன் பேசுவது என்பது சம்பந்தமாக இதில் ஆராயப்பட்டிருக்கின்றது. அத்தோடு நிலைப்பாடுகள் அல்லது முன்மொழிவுகளை வைத்திருப்பதன் அடிப்படையில் நாங்கள் சிலவற்றைத் தயாரிப்பதற்கான முடிவை எடுத்திருக்கின்றோம். அதன் பின்னர் எதிர்வரும் காலங்களில் நடைபெறும் பேச்சில் இறுதி முடிவுகளை எட்டும் வாய்ப்புக்கள் இருக்கிறது – என்றார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் மணிவண்ணன் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்தத் தேர்தலில் எடுக்க வேண்டிய நிலைப்பாடுகள் குறித்து அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும் தற்போது கூடி ஆராய்ந்திருக்கின்றோம். ஏற்கனவே நாங்கள் தீர்மானித்தபடி இந்தக் கூட்டு முன்வைக்கவேண்டிய கோரிக்கைகள் தொடர்பில் ஒவ்வொரு கட்சியும் தங்களுடைய நிலைப்பாடுகளை, கோரிக்கைகளை அறிக்கைகளாகச் சமர்ப்பித்திருக்கின்றன.

இவ்வாறு எல்லா தரப்புக்களாலும் கொண்டு வரப்பட்ட முன்மொழிவுகளை அனைத்தும் ஒரே வரைவாக ஒரு ஆவணத்துக்குள் கொண்டு வரும் வகையில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் அவை தொகுக்கப்படவுள்ளன. அந்தப் பொறுப்பை மாணவர்களிடம் விடுவதென்றும் யோசித்திருக்கிறோம் – என்றார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் கே.சுகாஷ் தெரிவிக்கையில் –

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரும் சேர்ந்து சகல தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளையும் சந்தித்திருந்தார்கள். ஒவ்வொரு கட்சிகளும் என்னென்ன அடிப்படையிலான கோரிக்கைகளை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற பிரதான வேட்பாளர்களிடம் முன்வைக்க வேண்டுமென்ற முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளோம். எங்களைப் பொறுத்தவரை எல்லா வேட்பாளர்களோடும் கதைப்பது ஒரு பிரயோசனமற்றதாகப் பார்க்கிறோம். ஆகவே வெற்றி பெற வாய்ப்பிருக்கின்ற பிரதான வேட்பாளர்ளான ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளின் வேட்பாளர்களிடம் கோரிக்கைகளை முன்வைத்துப் பேரம் பேசுவதாகத் தான் இது வரை இந்தப் பேச்சு சென்று கொண்டிருக்கிறது – என்றார். (ஐ-07)

## சஜித், கோட்டாபய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் சார்பில் மொத்தமாகக் கட்டுப்பணம் செலுத்தப்பட்ட 41 ஜனாதிபதி வேட்பாளர்களில் ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் சஜித் பிரேமதாஸ, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் தேசிய மக்கள் சக்தி சார்பில் அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட 35 பேர் மாத்திரம் வேட்புமனுக்களை நேற்றுத் தாக்கல் செய்தனர்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சார்பில் 18 வேட்பாளர்களும், அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளின் சார்பில் 2 வேட்பாளர்களும், சுயேச்சைக் குழுக்கள் சார்பில் 15 வேட்பாளர்களும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர்.

இதன்பின்னர் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பில் எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு முற்பகல் 11.10 மணி தொடக்கம் 11.40 மணி வரை 30 நிமிடங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டது.

இதன்போது இரண்டு முறைப்பாடுகள் மட்டும் தெரிவிக்கப்பட்டன. எனினும், அந்த இரண்டு முறைப்பாடுகளும் தேர்தல் ஆணைக் குழுவால் நிரகாரிக்கப்பட்டன.

தாக்கல் செய்யப்பட்ட 35 பேரின் வேட்புமனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டமையுடன், அவர்கள் தேர்தலில் போட்டியிட அனுமதியும் வழங்கப்பட்டது.

இலங்கை ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் அதிகளவு வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற தேர்தலாக இது அமைந்துள்ளது. இதனால் நீளமான வாக்குச் சீட்டை அச்சிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (ஐ)

## சஜித்துக்கு நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்புமனுவைத் தாக்கல் செய்துவிட்டு வெளியே வந்தபோது ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் அணிதிரண்டு அவரை வரவேற்றனர்.

வேட்புமனுவைத் தாக்கல் செய்ய தேர்தல்கள் ஆணைக் குழுவுக்குள் சஜித் பிரேமதாஸ நுழைந்தபோதே அவரின் ஆதரவாளர்கள் வெளியில் குவியத் தொடங்கினர்.

ஐ.தே.க. தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியின் அரசியல் பிரமுகர்களும் அங்கு படையெடுத்திருந்தனர்.

வேட்புமனுத் தாக்கலின் பின்னர் சஜித் பிரேமதாஸ வெளியே வந்தபோது அங்கு திரண்டிருந்த ஆதரவாளர்கள் அவருக்கு உற்சாக வரவேற்பளித்தனர்.

இதன்போது சஜித் பிரேமதாஸ அங்கு நின்ற அனைவரையும் பார்த்து கையசைத்து நன்றிகளைத் தெரிவித்தார். (ஐ)

## விலகினார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குமார வெல்கம வேட்புமனுவைத் தாக்கல் செய்யவில்லை.

வேட்புமனுத் தாக்கல் செய்வதற்காக குமார வெல்கம நேற்று தேர்தல்கள் செயலகத்துக்கு வரவில்லை.

இந்த நிலையில் குமார வெல்கமவின் பேச்சாளரான சட்டவாளர் ராஜித் கொடிதுவக்கு தேர்தல்கள் செயலகத்துக்கு முன்பாக, ஊடகவியலாளர்களிடம் பேசியபோது, குமார வெல்கம ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமாட்டார் என்றும், அவரது சார்பில் வேட்புமனுத்தாக்கல் செய்யப்படவில்லை என்று தெரிவித்தார். (ஐ)

## சமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல் செய்யவில்லை.

கோட்டாபய ராஜபக்ஷவின் வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்படாத நிலை ஏற்பட்டால் மாற்று ஏற்பாடாக, போட்டியிடவதற்காகச் சமல் ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை கட்டுப்பணம் செலுத்தியிருந்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து, கோட்டாபய ராஜபக்ஷவுக்கான நெருக்கடி தீர்ந்திருந்தது.

எனினும், அவருக்குச் சட்ட நெருக்கடிகள் ஏற்படக் கூடும் என்பதால், சமல் ராஜபக்ஷவும் வேட்புமனு தாக்கல் செய்வார் என்று கூறப்பட்டது.

இருந்தபோதிலும் நேற்று சமல் ராஜபக்ஷ தனது வேட்புமனுவை தாக்கல் செய்யவில்லை.

கோட்டாபய ராஜபக்ஷவுடன் அவர் ஒரே வாகனத்தில் தேர்தல்கள் செயலகத்துக்கு வருகை தந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## போட்டிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவினால் நேற்றுப் பிற்பகல் வெளியிடப்பட்டுள்ளது.

கட்டுப்பணம் செலுத்திய 6 வேட்பாளர்கள் போட்டியில் இருந்து விலகியுள்ள நிலையில், 35 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

கட்டுப்பணம் செலுத்திய வேட்பாளர்களில், ஆறு பேர் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யவில்லை.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதியுடன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 35 வேட்பாளர்களின் விவரம் வருமாறு:-

01. சஜித் பிரேமதாஸ – ஐக்கிய தேசியக் கட்சி

02. கோட்டாபய ராஜபக்ஷ – ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி

03. அநுரகுமார திஸாநாயக்க – தேசிய மக்கள் சக்தி

04. றொகான் பல்லேவத்த – ஜாதிக சங்வர்த்தன முன்னணி

05. மில்றோய் பெர்னான்டோ – சுயேச்சை

06. ஜெனரல் மகேஸ் சேனநாயக்க – தேசிய மக்கள் இயக்கம்

07. சிறிபால அமரசிங்க – சுயேச்சை

08. சரத் மனமேந்திர – நவ சிங்கள உறுமய

09. சமரவீர வீரவன்னி – சுயேச்சை

10. சமன் பிரசன்ன பெரேரா – எமது மக்கள் சக்தி கட்சி

11. அனுருத்த பொல்கம்பொல – சுயேச்சை

12. ஏ.எஸ்.பி. லியனகே – ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி

13. ஜயந்த கேதாகொட – சுயேச்சை

14. துமிந்த நாகமுவ – முன்னிலை சோசலிசக் கட்சி

15. அஜந்தா பெரேரா – ஸ்ரீலங்கா சோசலிசக் கட்சி

16. சமன்சிறி ஹேரத் – சுயேச்சை

17. அசோக வடிகமங்காவ – சுயேச்சை

18. ஆரியவன்ச திஸாநாயக்க – ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி

19. வஜிரபானி விஜேசிறிவர்த்தன – சோசலிச சமத்துவக் கட்சி

20. பத்தேகமகே நந்திமித்ர – நவசமசமாஜக் கட்சி

21. வண. அபரகே புண்ணானந்த தேரர் – சுயேட்சை

22. பியசிறி விஜேநாயக்க – சுயேச்சை

23. அனுர டி சொய்சா – ஜனநாயக தேசிய இயக்கம்

24. ரஜீவ விஜேசிங்க – சுயேச்சை

25. வண. பத்தரமுல்லே சீலாரத்ன தேரர் – ஜனசத முன்னணி

26. இலியாஸ் இத்ரூஸ் முகமட் – சுயேட்சை

27. அஜந்த டி சொய்சா – ருகுணு மக்கள் முன்னணி

28. விஜித குமார கீர்த்திரத்ன – சுயேட்சை

29. எம்.கே.சிவாஜிலிங்கம் – சுயேச்சை

30. எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா – சுயேச்சை

31. பிரியந்த எதிரிசிங்க – ஒக்கம வசியோ ஒக்கம ரஜவரு சவிதானய

32. நாமல் ராஜபக்ஷ – தேசியங்களின் ஒற்றுமை இயக்கம்

33. அஹமட் ஹசன் முகமட் அலவி – சுயேச்சை

34. குணபால திஸ்ஸகுட்டியாராச்சி – சுயேச்சை

35. சுப்ரமணியம் குணரத்தினம் – எமது தேசிய முன்னணி.

## ஊழியர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தகவலை ரயில்வே திணைக்களம் வெளியிட்டுள்ளது.

சம்பள முரண்பாடு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து ரயில்வே இயந்திர இயக்குநர்கள், கட்டுப்பாட்டாளர்கள், பாதுகாவலர்கள் உள்ளிட்டோர் தொடர்ச்சியாக 12 நாள்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் ரயில்வே திணைக்களத்துக்கு 19 கோடி ரூபா வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வோர் – அரசியலில் ஈடுபடும் அரச ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

– இவ்வாறு நேற்று அறிவித்தார் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய.

வேட்புமனுத் தாக்கலின் பின்னர் நேற்று தேர்தல்கள் செயலகத்தில் வேட்பாளர்களுக்காக இடம்பெற்ற கூட்டத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

ஆதரவாளர்கள் அநீதியாக அத்துமீறலில் ஈடுபட அரசியல்வாதிகள் அனுமதிக்கக் கூடாது. அத்துடன் அரசியல்வாதிகள் சட்டதிட்டங்களை முறையாகக் கடைப்பிடிக்கவேண்டும். ஊடகங்களும் பொறுப்புடன் செயற்படவேண்டும். ஒருவரை ஊக்குவித்து ஒருவரைப் பாதிக்கும் வகையில் ஊடகங்கள் செயற்படக்கூடாது.

சமூக ஊடகங்கள் ஊடாக தவறான பிரசாரம் அல்லது தவறான செய்திகளை வெளியிடாமல் பொறுப்புடன் செயற்படவேண்டும். உள்நாட்டு, வெளிநாட்டுச் சமூக ஊடகங்கள் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வாக்களிக்கும் விதம், வாக்களிப்பதைப் படமெடுத்து வெளிப்படுத்தல் தடை செய்யப்பட்டுள்ளது. வாக்களிப்புக்கு 48 மணி நேரத்திற்க்கு முன்னர் நிசப்த காலம் என்பதால் அந்தக் காலப் பகுதிக்குள் எந்தவகையான பிரசாரங்களையும் செய்யமுடியாது. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் – என்றார். (ஐ)

## சிவாஜிலிங்கத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியிடும் முடிவைக் கட்சி எடுக்கவும் இல்லை. அவரது முடிவுக்கும் எங்கள் கட்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஆகையால் எமது கட்சி கூடி அவருக்கு எதிராக நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

– இவ்வாறு தெரிவித்தார் ரெலோ அமைப்பின் தலைவரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசியக் கட்சிகளை இணைத்து நேற்று நடந்த 2ஆம் சுற்றுச் சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அவர் கட்சியில் எந்தவொரு முடிவையும் கேட்காமல்தான் போட்டியிடுகின்றார். நிச்சயமாகக் கட்சி கூடி அவருக்கு எதிரான நடவடிக்கையை நாங்கள் எடுக்க இருக்கின்றோம். எமது கட்சிக்கும் சிவாஜிலிங்கம் எடுத்த முடிவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

பொது வேட்பாளர் என்ற ரீதியில் அவரும் பரிசீலிக்கப்படுவாரா என்பது தொடர்பில் எந்தவிதமான முடிவும் இதுவரை எடுக்கப்படவில்லை. எங்களைப் பொறுத்தமட்டில் சிவாஜிலிங்கம் எங்கள் கட்சியினுடைய வேட்பாளர் அல்லர். – என்றார். (ஐ-07)

*(மற்றொரு செய்தி 05ஆம் பக்கத்தில்)*

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## சுடலை ஞானம் பிறக்குமா?

**நேற்றுடன் ஜனாதிபதித் திருவிழா உத்தியோகபூர்வமாகக் களை கட்டிவிட்டது.**

**இனி அரசியல் சேறு அள்ளி வாரி வீசும் அராஜகம் சர்வ சாதாரணமாக அரங்கேறும்.**

**அதுவும், பதில் கூறச் சட்ட கடப்பாடு பொறுப்பற்ற சமூக ஊடகங்கள் வாயிலாக இவ்வாறு சேறு வாரிப் பூசும் அட்டகாசம் அமர்க்களமாக இடம்பெறும்.**

**அப்படிச் செய்ய வேண்டாம் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் நேற்று வேட்புமனுத் தாக்கலின்போது சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு ஆலோசனை கூறியுள்ளபோதிலும், அந்த ஆலோசனை பெரும்பாலும் செவிடன் காதில் ஊதிய சங்காக – புறக்குடத்து நீராக – எருமை மாட்டில் மழை பெய்தமைபோல – பலனின்றி அவமேயாகும் என்பது நிச்சயம்.**

**வேட்பு மனுத் தாக்கலுக்கு முன்னர், நேற்றுமுன்தினம் கட்டுப்பணம் செலுத்துவதற்கான கால அவகாசம் முடிந்தபோது ஒரு விடயம் தெளிவாயிற்று. அதைக் கவனிக்க வேண்டும்.**

**அது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தத் தேர்தலில் போட்டியிடவில்லை. அதாவது இப்போதைய தேர்தலின் முடிவு அறிவிக்கப்படும்போது அவரது தற்போதைய நிறைவேற்று அதிகாரப் பதவியும் காலாவதியாகின்றது.**

**அப்படிப் பார்த்தால் இன்னும் நாற்பது நாள்கள்தான் அவரது அதிகாரம்.**

**அது முடிய, அவர் மூடை, முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட வேண்டியதுதான்.**

**இப்போதே அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் மூடை முடிச்சுக்களைக் கட்டும் பணி ஆரம்பித்து விட்டதாகச் செய்திகள் கசிந்துள்ளன.**

**நல்லது. யதார்த்தத்தை – நிஜத்தை – அவர் எதிர்கொண்டேதான் ஆகவேண்டும்.**

**எவ்வளவு எதிர்பார்ப்போடு, அவர் மட்டுமல்ல, அவரைப் போல பல நூறு தலைவர்கள் தங்கள் அரசியல் எதிர்காலத்தையே 'ரிக்ஸ்' எடுத்துத்தான் அவரை இப்பதவிக்குக் கொண்டு வந்தனர்.**

**ஆனால், எல்லாவற்றையும் போட்டடித்துக் குழப்பி விட்டு, தோற்றுப்போன தலைவர் போன்று, இப்போது பதவியில் இருந்து அவர் இறங்க வேண்டியவராக இருக்கின்றார்.**

**குறைந்த பட்சம் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான – அதற்கான தீர்வையும் உள்ளடக்கிய அரசமைப்புத் திருத்தத்தை முன் நகர்த்துவதற்கான – முயற்சியிலாவது அவர் இதய சுத்தியுடனும், நேர்மையுடனும் நடந்திருக்கலாம்.**

**அப்படி இல்லாமல், தமக்குக் குருட்டு அதிஷ்டம் போலக் கிடைத்த இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி மூலம், தம்மை அத் தேர்தலில் எதிர்த்து நின்ற அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்து சுதந்திரக் கட்சியின் தலைமையைப் பிடுங்கி எடுத்துக் கொண்ட மைத்திரிபால சிறிசேன, அந்த வேலையையாவது ஒழுங்காகச் செய்திருக்கலாம்.**

**அதையும்கூட அவர் செய்யவில்லை. கடந்த பொதுத் தேர்தலில் 96 எம்.பிக்களுடன் நாடாளுமன்றுக்குச் சென்ற அக்கட்சியில் இப்போது – அவரது தலைமையின் கீழ் – ஒன்றரை டசின் எம்.பிக்கள் கூட இல்லை.**

**எல்லாவற்றையும் – நாட்டின் இனத்துவ ஐக்கியத்துவக்கான – சகல எத்தனங்களையும் – தோற்கடிக்கச் செய்து குட்டிச்சுவராக்கிய பின்னர் –**

**யார், தமது கதையை எட்டடி மண்ணுக்குள் முடிக்கத் திட்டமிட்டிருந்தார்கள் என்ற விவரத்தை கடந்த ஜனாதிபதித் தேர்தல் சமயத்திலும் பின்னரும் அவர் வெளியிட்டு வந்தாரோ அந்தத் தரப்பிடமே போய் அரசியல் சரணாகதி அடைந்து தன்னையும் கெடுத்துக் கொண்டு, முழு நாட்டையுமே குழப்பியடித்து விட்டார் என்பதே உண்மை.**

**எஞ்சியிருக்கப் போகின்ற இந்த நாற்பது நாள்களில் கூட அவர் மரியாதையாக நடந்து கொள்வார் என்று நம்புவதற்கு இடமில்லை.**

**தேர்தல் சமயத்திலும் இசகு பிசகாக நடந்து கொண்டு, அரசியல் குட்டையை மேலும் குழப்புவார் அவர் என்றே கொழும்பு வட்டாரங்கள் ஊகம் வெளியிடுகின்றன.**

**அவரோடு உதவியாளர்களாகவும், ஆதரவாளர்களாகவும் கடைசி நேரம்வரை ஒட்டிக்கொண்டு, அவரைத் தவறான வழியில் வழிப்படுத்திய பலர், இப்போதே ஒவ்வொருவராக அவரை விட்டுக் கழறத் தொடங்கி விட்டார்கள். அவர்களின் பெயர்களைப் பட்டியலிடுவது சுலபம்.**

**பதவியை விட்டு இறங்கும்போதாவது அவருக்குத் தெளிவு ஏற்படுமானால் – சுடலை ஞானம் பிறக்குமானால் – உண்மை நிலைவரம் புரியும். தமது கடந்த கால செயற்பாடுகளுக்காக அவர் மனம் வருந்துவார்.**

# விமான சேவை அபிவிருத்திப் பணிகளுக்குப் பாராட்டு கிழக்கில் துணைத் தூதரகம் அமைக்குமாறு வலியுறுத்து

## இந்திய அரசிடம் முன்னாள் முதல்வர் நஸிர் அஹமட் கோரிக்கை

கொழும்பு, ஒக். 08

இந்தியஅரசின் நிதியுதவி மூலமாகப் பலாலி விமான நிலையம் சர்வதேசதரத்தில் அபிவிருத்திசெய்யப்பட்டுள்ளது. இதனை யாழ்ப்பானம் சர்வதேச விமான நிலையம் எனப் போக்குவரத்து அமைச்சு பெயரிட அமைச்சரவை அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதோடுவிமான சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை வரவேற்புக்குரிய அம்சமாகும். இதேபோன்று கிழக்கில் இந்தியதுணைத் தூதரகம் ஒன்றும் உடன் ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசரமானதும் அவசியமானதுமாகும்.



– இவ்வாறு கிழக்குமாகாண முன்னாள் முதலமைச்சர் நஸிர் அஹமட் கோரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்த அவரது செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது: –

யாழ் விமானநிலையம் அபிவிருத்திசெய்யப்பட்டுள்ளதுடன் மட்டக்களப்புவிமான நிலையம் மட்டக்களப்பு சர்வதேச விமான நிலையம் எனவும் ரத்மலானை விமான நிலையம் ரத்மலானை சர்வதேச விமான நிலையம் எனவும் பெயர் மாற்றம் பெற்றுள்ளன. இந்நிலையில் தற்போது தென்னிந்தியா – யாழ் – மட்டக்களப்புக்கான விமான போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலமாக இந்தியாவுக்கும் இலங்கைக்குமான விமான சேவைகள் இலகுவாக்கப்பட்டுள்ளதுடன் பல்வேறு வரபிரசாதங்கள் ஏற்பட்டுள்ளன.

எனினும் கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் தமது இந்திய பயணத்துக்கான விசா மற்றும் வர்த்தக தொடர்பாடல்களை மேற்கொள்வதில் தொடர்ந்தும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். தற்போது வடக்கு மாவட்டத்தில் இந்திய தூதரகத்தின் துணை அலுவலகம் அமையப்பெற்றுள்ளதால் இவ்விடயங்களை அங்குள்ள மக்கள் பெறுவது இலகுவாக்கப்பட்டுள்ளது. இத்தகைய நிலை கிழக்கிலும் ஏற்படவேண்டும்.

நான் கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக இந்திய பிரதமர் உட்பட வெளிவிவகார அமைச்சர் மற்றும் போக்குவரத்து அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகள் பலரையும் நேரில் சந்தித்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந்தேன். இது விடயத்தில் அவர்கள் சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர் கட் டம் கட்டமாக இவ் விடயம் தீர்வு செய்யப்படும் எனவும் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் தற்போது விமான நிலையப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு வரும் நிலையில் உடனடியாக கிழக்கில் துணைத் தூதரகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான பணியை இந்திய அரசு உடன்மேற்கொள்ள வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன் – என்றுள்ளது. (ஐ)

# சஜித் ஜனாதிபதியானால் இந்தியா 50,000 வீடுகளை வழங்கவுள்ளது!

## அமைச்சர் சஜீவ சேனசிங்க தகவல்

கொழும்பு, ஒக். 08

இலங்கையில் ஊழலற்ற ஆட்சி ஒன்றைக் கொண்டு செல்லக்கூடிய சஜித் பிரேமதாஸ போன்ற ஒருவர் ஆட்சிக்கு வருவாராக இருந்தால் இலங்கையில் மேலும் 50,000 வீடுகளை அமைப்பதற்கான நிதியை இந்தியா அரசு வழங்கத் தயாராக இருப்பதாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்திருக்கிறார் என அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளரான அமைச்சர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து தமிழ் முற்போக்குக் கூட்டணியின் முதலாவது பிரசாரக் கூட்டம் நேற்று முன்தினம் ஹற்றனில் இடம்பெற்றது.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

மஹிந்த ராஜபக்ஷவிடம் காணப்படுவது இனபேதம் மாத்திரமே. நாட்டில் யுத்தம் முடிந்த பின்பு மக்களின் மனதில் ஆதரவை பெற்றுக் கொள்வதற்கு மக்கள் மீது ஆதரவாக இருப்பவரைப் போல் எவ்வளவு பொய் கூற முடியுமோ அவ்வளவு பொய்களைக் கூறியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ கடந்த காலங்களில் மலையக மக்களை ஏமாற்றி உள்ளார். இந்த நாடு ராஜபக்ஷாக்களின் நாடு என்பதை காட்டிக் கொண்டு ஹிட்லர் போன்றவர்களின் ஆட்சியை முன்னெடுப்பதுதான் அவர்களின் நோக்கம் .

நாம் வெளிநாடுகளுக்குச் சென்றபோது உங்கள் நாட்டுத் தலைவர் யார் என்று எம்மிடம் கேட்டபோது மஹிந்த ராஜபக்ஷ என்று கூறினோம். நாட்டின் பாதுகாப்புச் செயலாளர் யார் என்று கேட்டனர். அதற்கு கோட்டாபய ராஜபக்ஷ என்று தெரிவித்தோம். நாட்டுப் பொருளாதார அமைச்சர் யார் என்று கேட்டனர். அதற்கு நாங்கள் பஸில் ராஜபக்ஷ என்று கூறினோம். நாட்டின் நாடாளுமன்றச் சபாநாயகர் யார் என்று கேட்டனர் சமல் ராஜபக்ஷ என்று கூறினோம். உங்கள் முதலமைச்சர் யார் என்று கேட்டனர் சசிந்திர ராஜபக்ஷ என்று கூறினோம்.

அதேபோன்று இளம் உறுப்பினராக நாமல் ராஜபக்ஷவும் இருக்கிறார் என்று கூறினோம். அதற்கு அவர்கள் உங்கள் நாட்டில் ஏனைய தலைவர்களும் ராஜபக்ஷாக்களா எனக் கேள்வி எழுப்பினார்கள் – என்றார். (ஐ)

# அரசதுறையின் ஊழியர்களுக்கு தேர்தல் ஆணைக்குழு அறிவுரை

## பணிப்புறக்கணிப்பை கைவிடுமாறு

கொழும்பு, ஒக். 08

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள ரயில்வே ஊழியர்கள் உள்பட அனைத்து அரச துறை ஊழியர்களையும் உடனடியாகப் பணிக்குத் திரும்புமாறு தேசிய தேர்தல் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

சம்பள முரண்பாடு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து ரயில்வே ஊழியர்கள் கடந்த இரண்டு வாரமாக தொடர் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன், அரச நிர்வாக சேவை, பல்கலைக்கழகக் கல்விசாரா ஊழியர்கள் உள்ளிட்ட அரச துறை ஊழியர்களும் பல நாள்களாக தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதனால் ரயில்வே சேவை, பல்கலைக்கழக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 16ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் வேட்பு மனுத் தாக்கல் நேற்று இடம்பெற்றது.

இந்த நிலையிலேயே தேர்தல் நடவடிக்கைகளைச் சீராக முன்னெடுக்கும் வகையில் போராட்டங்களைக் கைவிடுமாறு முதல் கட்டமாக தேசிய தேர்தல் ஆணைக்குழு கேட்டுள்ளது. (ஐ)

**நாளை** 09.10.2019 புதன்கிழமை

நட்சத்திரம்: திருவோணம் மு.இ 11.29 வரை
திதி : தசமி பி.ப 5.39 வரை

இராகுகாலம் : 3.02 – 4.32
சுப நேரம் : 10.32 – 12.02

# சிவாஜிலிங்கம் மீது ரெலோ நடவடிக்கை

## செல்வம் எம்.பி. அறிவிப்பு

**வவுனியா, ஒக். 08**

**எமது கட்சியைச் சேர்ந்த எம்கே.சிவாஜிலிங்கம் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுவைத் தாக்கல் செய்தால் அவரை கட்சியிலிருந்து நீக்குவதா – இல்லையா என்று தமிழீழ விடுதலை இயக்கம் தீர்மானம் எடுக்கும் என்று ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**



வவுனியா வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் ஊடகவியலாளர்கள் சிவாஜிலிங்கம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளமை தொடர்பாக கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தவிசாளரான சிவாஜிலிங்கம் கட்சியின் தீர்மானத்துக்கு அப்பால், கட்சியுடன் எந்தக் கலந்துரையாடலையும் மேற்கொள்ளாது ஜனாதிபதித் தேர்தலில் போட்டி இடுவதற்கு தீர்மானித்துள்ளார். அவர் வேட்பு மனுத் தாக்கல் செய்யக்கூடாது என்று நாம் கோரி வருகிறோம். அவர் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தால் அவரைக் கட்சியிலிருந்து நீக்குவதா, இல்லையா என்று தமிழீழ விடுதலை இயக்கம் தீர்மானம் எடுக்கும்.

எமது கட்சி ஒழுக்கமான கட்டுக்கோப்புள்ள ஒரு கட்சி, ஜனநாயக ரீதியாகச் செயற்படும் கட்சி. அதில் முக்கிய பதவியை வகிக்கும் சிவாஜிலிங்கம் தன்னிச்சையாகச் செயற்படுகின்றமை ஏற்றுக்கொள்ள முடியாது. அது எமது கட்சிக்குப் பாதகத்தை ஏற்படுத்தும்.

இதேவேளை, இந்தத் தேர்தலைப் பகிஷ்கரிப்பதையோ, தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதையோ நாம் விரும்பவில்லை. வெற்றி பெறக் கூடியவருக்கு வாக்கை அளிக்காமல் வேறு நபருக்கு அளித்தால் அவர்கள் வெற்றி பெற்ற பின்னர் எம்மைப் பழி வாங்குவார்கள் என்ற அச்சம் எமது மக்கள் மத்தியில் இருக்கிறது.

அத்துடன் கோட்டாபய தொடர்பாகவும் எமது மக்கள் அச்சமடைகின்றனர். எனவே இவ்வாறான சம்பவங்கள் எமது மக்கள் எதிர்க்கின்ற ஒருவரை மீண்டும் கொண்டு வந்து விடுமோ என்ற பிரச்சினை இருக்கிறது. அத்துடன் நாம் சரியான ஒருவரை நிறுத்தவில்லை என்றால் தமிழ்க் கட்சிகளுக்கு மக்கள் ஆதரவை தெரிவிக்கவில்லை, அவர்கள் அந்தக் கட்சிகளோடு இல்லை என்ற தோற்றப்பாடு ஏற்படும் அபாயகரமான நிலையும் உள்ளது.

எனவே எம்மைப் பொறுத்தவரை வெற்றி பெறும் வேட்பாளரிடம் எமது கோரிக்கையை முன்வைத்து அதை நடைமுறைபடுத்துவதற்கான செயற்பாட்டை மேற்கொள்ளவேண்டும் என்று கருதுகிறோம்.

அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து அந்தக் கோரிக்கையை முன்வைக்கவேண்டும், அப்போது அது பெறுமதியானதாக இருக்கும். இம்முறை தேர்தலில் எமது தரப்பு கோரிக்கைகளை ஏற்றுக்கொள்பவர்களைத்தான் நாம் ஆதரிக்க முடியும். எமது கட்சியும் அதில் உறுதியாக உள்ளது. எமது கோரிக்கைகளை எடுத்தெறிந்தவர்களுக்கு எமது மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொடுப்பது தவறான விடயம்.

வேட்பாளர்களுடன் பேசும்போது இதனை நாம் வலுவாகக் கூறுவோம். அவர்களது வெற்றிக்காக அவர்கள் எமது கோரிக்கைக்கு ஒத்து வரவேண்டும் என்பதுவே எமது கருத்து. ஒற்றுமையாக அதனை முன்வைக்கும் போது அது சாத்தியமாகும். அப்படி இல்லையாயின் என்ன செய்யலாம் என்று நாம் யோசிக்கலாம் – என்றார். (ஐ)

---

# புதிய சாதனை படைக்கும் 2019 ஜனாதிபதித் தேர்தல்

கொழும்பு, ஒக். 08

அடுத்த மாதம் நடைபெறவுள்ள எட்டாவது ஜனாதிபதித் தேர்தல், இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில், புதிய பல சாதனைகளைப் படைக்கும் ஒன்றாக அமைந்துள்ளது.

இந்தத் தேர்தலே, இலங்கை வரலாற்றில் அதிகளவு வேட்பாளர்கள் போட்டியிடும் ஜனாதிபதித் தேர்தலாக அமையவுள்ளது.

கடந்த 2015 ஜனாதிபதித் தேர்தலில் 19 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தனர், இம்முறை 41 வேட்பாளர்களுக்கு கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ள நிலையில், இரண்டு மடங்கு வேட்பாளர்கள் களத்தில் குதிக்கின்றனர்.

வேட்பாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிலையும் பரிதாபமாகியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு 400 கோடி ரூபா செலவாகும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு மதிப்பீடு செய்திருந்தது.

ஆனால் அதிகளவு வேட்பாளர்கள் களமிறங்குவதால், மேலதிகமாக 100 கோடி ரூபா செலவு ஏற்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

41 வேட்பாளர்கள் சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளதால், இம்முறை மிக நீளமான வாக்குச்சீட்டை அச்சிடவேண்டியிருக்கும் என்றும் தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். இவற்றை விட இந்தத் தேர்தல் பதவியில் உள்ள ஜனாதிபதியோ பிரதமரோ போட்டியிடாத முதல் ஜனாதிபதித் தேர்தலாகவும் அமையவுள்ளது.

இப்போது பதவியில் உள்ள ஜனாதிபதி சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் போட்டியிடத் தகுதி பெற்றிருந்தும், அவர்கள் போட்டியில் இருந்து ஒதுங்கியுள்ளனர்.

இந்த தேர்தலே சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர் ஒருவர் அதிகாரபூர்வ வேட்பாளராகப் போட்டியிடாத முதல் தேர்தலாகவும் அமையவுள்ளது.

ஐ.தே.க. இதற்கு 2010, 2015 தேர்தல்களில் பொதுவேட்பாளரை ஆதரித்திருந்தது. இதனால் தமது கட்சியின் வேட்பாளரை நிறுத்தவில்லை.

எனினும், சுதந்திரக் கட்சி இம்முறையே முதல் தடவையாக போட்டியில் யாரையும் நிறுத்தவில்லை. (ஐ)

---

# மின்தடை

யாழ்ப்பாணம், ஒக். 08

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**

இலங்கை வங்கி பிரதேசம், சுன்னாகம் ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில் -**

பெரியபண்டிவிரிச்சான், சின்னப்பண்டிவிரிச்சான், மடு பிரதேசம் ஒரு பகுதி, மடு நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

---

# பெண்ணின் வயிற்றிலிருந்த 19.5 கிலோ கட்டி அகற்றல்!



மட்டக்களப்பு, ஒக். 08

பெண் ஒருவரின் வயிற்றில் இருந்த 19.5 கிலோ நிறையுள்ள கட்டியொன்றை அகற்றி அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர்கள் சாதனையை நிகழ்த்தியுள்ளனர் என அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஐ.எம். ஜவாஹிர் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை முதன் முறையாக இந்தச் சத்திர சிகிச்சையை மேற்கொண்டதாகவும், இது சுமார் 2 மணித்தியாலம் இடம்பெற்றதன் பின்னர் அந்தக் கட்டியை அகற்ற முடிந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

19.5 கி.கி நிறையையும் சுமார் 48 செ.மீ. நீளத்தையும் 34 செ.மீ. அகலத்தையும் 23 செ.மீ. உயரத்தையுமுடைய பெரும் கட்டி ஒன்றை வெட்டி அகற்றிய சாதனையை எமது வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள் வெற்றிகரமாகச் செய்து முடித்திருக்கின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சத்திர சிகிச்சையை மேற்கொண்ட சத்திர சிகிச்சை நிபுணர்களான எஸ்.எஸ்.ஜமீல், பீ.கே.ரவீந்திரன், மகப்பேற்று மற்றும் பெண்ணோயியல் வைத்திய நிபுணர் யுரேக்கா விக்ரமசிங்க, மயக்க மருந்து வைத்திய நிபுணர் றுவான் குருப்பு, மயக்க மருந்து மற்றும் சத்திரசிகிச்சை சிரேஷ்ட வைத்தியர்கள், சத்திர சிகிச்சை கூட தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார உதவியாளர்கள் உள்ளிட்ட குழுவினரால் இது முன்னெடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். (ஐ)

---

# தாக்குதல் வதந்திகளில் உண்மையில்லை

கொழும்பு, ஒக். 08

பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக வெளியாகியுள்ள வதந்திகளில் எவ்வித உண்மையும் இல்லை எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும், இவ்வாறான தகவல்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தியுள்ளதாக அந்த அமைச்சு கூறியுள்ளது.

புலனாய்வுப் பிரிவுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) ஷாந்த கோட்டேகொட ஊடகங்களுக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

எனினும், பரவியுள்ள வதந்தி தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களுக்குச் சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

---

# திருகோணமலை மயானத்தில் துப்பாக்கிகள் கண்டெடுப்பு!



திருமலை, ஒக். 08

திருகோணமலை, அலஸ்தோட்டம் பகுதியில் நேற்று முன்தினம் சடலம் ஒன்றைப் புதைப்பதற்காக மயானத்தில் குழிதோண்டியபோது, ஆயுதங்கள் சில கண்டெடுக்கப்பட்டுள்ளன என உப்புவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் மண்ணுக்குள் புதைந்திருந்த பரல் ஒன்றைத் திறந்து பார்த்தபோது அதற்குள் ஆயுதங்கள் காணப்பட்டுள்ளன. இதனையடுத்து, பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளனர். துப்பாக்கி ரவைகள் மற்றும் மகசின் உள்ளிட்ட ஆயுதங்கள் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட பிரதேசத்தில் இந்திய இராணுவக் காலத்தில் ரெலோவின் பயிற்சி முகாம் இயங்கியதாகத் தெரியவருகின்றது. கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் யாவும் சுத்தப்படுத்தி, பாவிக்கும் நிலையில் காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

---

northern PC Park
கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
வடக்கின் கணினிப் பூங்கா
# 10, Muddaskada Junction Stanly Road, Jaffna
தரமான கணினிகளைப் பெறுக் கொள்ள நம்மை நாடுங்கள்
www.pcpark.co
info.pcpark.co
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern Pc Park
0777570124
0773366443
0766999597
0717772377
0215675566
0212229581
0212222050
0212220388

# இந்தியா – அமெரிக்கா இடையில் சில வாரங்களில் வர்த்தக ஒப்பந்தம்?



சென்னை,ஒக்.08

இந்தியா – அமெரிக்கா இடையே இன்னும் சில வாரங்களில் வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட வாய்ப்பிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியா – அமெரிக்கா இடையே, பொருள்கள் ஏற்றுமதி, இறக்குமதி, வரிவிதிப்பு தொடர்பாக ஒப்பந்தம் எதுவும் கிடையாது. எனவேதான் வரிவிதிப்புத் தொடர்பாக இருநாடுகள் இடையே பூசல் இருந்து வருகிறது. ஹார்லி டேவிட்சன் இருசக்கர வாகனங்களுக்கு இந்தியா 100 வீதம் வரிவிதிப்பதாகக் குற்றம்சாட்டிய அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், இந்தியாவுக்கு வழங்கி வந்த முன்னுரிமை வர்த்தக நாடு என்ற அந் தஸ்தை ரத்து செய்தார்.

இதன் மூலம், அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் இந்தியப் பொருள்களுக்கான வரிச்சலுகை ரத்தானது. பூசல்கள் நீடிக்கும் அதேவேளையில், வர்த்தக ஒப்பந்தத்தை எட்டுவதில் இருநாடுகளும் துடிப்புடன் செயல்பட்டு வருகின்றன. அதற்கான பேச்சு ஒருபுறம் நடைபெற்று வரும் நிலையில், ஒப்பந்தம் இறுதியாவதற்கான வாய்ப்பு பிரகாசமாகி இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருநாடுகள் இடையே அதிக அளவிலான பொருள்களை வர்த்தகம் செய்து கொள்வதென முடிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஹார்லி டேவிட்சன் பைக்குகள் போன்றவற்றின் மீதான வரியைக் குறைக்க இந்தியா தரப்பில் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப் படுகிறது.

முன்னுரிமை வர்த்தக நாடு என்ற அந்தஸ்துடன், இந்தியப் பொருள்களுக்கு மீண்டும் வரிச்சலுகை அளிக்க அமெரிக்கா திட்டமிட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

பிரதமர் மோடி – அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் இடையேயான அடுத்த சந்திப்பின் போது, இதுகுறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒப்பந்தம் தொடர்பாக இருநாடுகளைச் சேர்ந்த வர்த்தக அமைச்சர்கள் கூட்டாக அறிவிக்க உள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

# குஜராத்தில் திடீரென இடிந்து வீழ்ந்த பாலம்

## நான்கு கார்கள் சிக்குண்டன

குஜராத் மாநிலம் ஜுனாகாத் அருகே பாலம் ஒன்று திடீரென இடிந்து விழுந்ததில், அதில் சென்று கொண்டிருந்த கார்கள் இடிபாடுகளுக்குள் சிக்கின.



குஜராத் மாநிலத்தில் கனமழை பெய்து வரும்நிலையில், ஜுனாகாத் அருகே மலாங்கா எனும்கிராமத்தில்பாலம் ஒன்று திடீரென இடிந்து விழுந்தது. பாலத்தின் மையப்பகுதி அப்படியே ஆற்றுக்குள் உள்வாங்கியதால், அந்த சமயத்தில் பாலத்தில் சென்று கொண்டிருந்த 4 கார்கள் இடிபாடுகளில் சிக்கின.

இந்த விபத்தில் கார்களுக்குள் இருந்த சிலரும் சிக்கிக் கொண்டனர் எனவும், உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதே சமயம் காயமடைந்த சிலர் பத்திரமாக மீட்கப் பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாலம் இடிந்து விழுந்த விபத்தால் ஜுனாகாத்திலிருந்து, முந்த்ரா செல்லும் சாலையில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது.

# தமிழக தேன்கனிக்கோட்டையருகே வேப்ப மரத்தில் பால் வடியும் அதிசயம்

தமிழ்நாட்டில் தேன்கனிக்கோட்டை அருகே வேப்ப மரத்தில் திடீரென பால் வடிய ஆரம்பித்ததால் பெண்கள் திரண்டு வந்து பூஜைகள் செய்து வழிபட்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அருகே உள்ள அன்னியாளம் கிராமத்தில் அரசமரம் வேப்பமரம் நடுவில் நாகர்சாமி சிலைகளுக்கு கிராம மக்கள் பூஜை செய்து வருகின்றனர். இந்த நிலையில் நேற்றுக் காலை அந்த வேப்ப மரத்தில் திடீரென்று பால் வடிய ஆரம்பித்தது.

இதைப் பார்த்த பெண்கள் பரவசமடைந்தனர். அங்கு திரண்டிருந்த பெண்கள் உடனே அந்த மரத்திற்கு விளக்கேற்றி பூஜைகள் செய்து வழிபட்டனர்.

இதையறிந்த சுற்று வட்டார கிராம மக்கள் கூட்டமாக வந்து வேப்ப மரத்தில் பால்வடிவதை பார்த்து பரவசமடைந்து வணங்கி செல்கின்றனர். இச்சம்பவம் அப்பகுதி முழுவதும் பரவியதால் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து பால்வடிவதை பார்த்த வண்ணம் உள்ளனர்.

# பா.ஜ.க. மூத்த தலைவர் உள்பட ஐவர் கொடூத் தாக்குதலில் சாவு

## மகாராஷ்டிராவில் மர்மக் குழு கைவரிசை

மகாராஷ்டிராவில் பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் உட்பட 5 பேர் கொடூர தாக்குதலில் கொல்லப்பட்டு உள்ளனர்.

மகாராஷ்டிராவின் ஜல்காவன் நகரில் பூவால் பகுதியில் வசித்து வந்தவர் பா.ஜ.க. உள்ளூர் தலைவர் ரவீந்திரா காரத். இவரை வீட்டுக்கு வெளியே வைத்து அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் சிலர் துப்பாக்கிகளால் சுட்டுள்ளனர்.



அவரது அலறல் சத்தம் கேட்டு குடும்பத்தினர் வெளியே வந்துள்ளனர். அப்படி வெளியே வந்த அவரது குடும்பத்தினர் 3 பேர் மற்றும் அவரது மகனின் நண்பர் என மேலும் நான்கு பேர் மீதும் அந்த நபர்கள் துப்பாக்கிகளால் சுட்டனர். பின்பு ஆத்திரம் தீராமல் அவர்கள் மீது ஆயுதங்களால் கொடூர முறையில் தாக்குதல் நடத்தி அனைவரையும் கொன்று விட்டு அங்கிருந்து தப்பிச் சென்று விட்டனர்.

இந்தச் சம்பவம் பற்றி பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இதில் 3 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். அவர்களிடம் தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.




# நியூமெக்சிகோ மாகாணத்தில் வண்ணமிகு பலூன் திருவிழா

அமெரிக்காவின் நியூமெக்சிகோ மாகாணத்தின் அல்பக்கர்க் நகரில் நடைபெற்று வரும் சர்வதேச பலூன் திருவிழாவில் பறக்கவிடப்பட்ட வெப்பக் காற்று பலூன்கள் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தன.

உலகின் இரண்டாவது மிகப் பெரிய பலூன் திருவிழா ஆண்டுதோறும் ஒக்ரோபர் மாதம் ஒன்பது நாள்கள் நடைபெறுவது வழக்கம். சனிக்கிழமை விழா தொடங்கியபோது மோசமான வானிலை காரணமாக பலூன் பறக்கவிடும் நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டது. நேற்றுமுன்தினம் வானம் தெளிவாக காணப்பட்டதால் நூற்றுக்கணக்கான பலூன்கள் பறக்கவிடப்பட்டன.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆர்வலர்கள் பங்கேற்றுப் பல வண்ணங்களில், பல வடிவங்களில் பலூன்களை வானில் பறக்கவிட்டனர். காற்றில் மிதந்த பலூன்களைக் கண்டு அங்கு திரண்டிருந்த பார்வையாளர்கள் உற்சாகமடைந்தனர். 13 ஆம் திகதி வரை நடைபெற உள்ள பலூன் திருவிழாவில் 500 இற்கும் மேற்பட்ட வெப்பக் காற்று பலூன்கள் பறக்கவிடப்பட உள்ளன.



# ஹொங்கொங் போராட்டத்தில் ஊடகவியளாளர் மீது பற்றிய தீ!



ஹொங்கொங் போராட்டத்தின் போது செய்தியாளர் மீது தீப்பற்றி எரிந்த காட்சிகள் வெளியாகியுள்ளன.

முகமூடி அணிந்து போராடுபவர்களை கைது செய்து ஓராண்டுவரை சிறை வைக்கும் கொலனி ஆதிக்க காலத்திய அவசர சட்டங்களைக் கைவிட வலியுறுத்தி நேற்றுமுன்தினம் ஹொங்கொங்கில் பல இடங்களில் போராட்டங்கள் நடைபெற்றன.

போராட்டங்களில் வன்முறை வெடித்ததில், பொலிஸார் அவர்களை கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசிக்கலைத்தனர். இதற்கு பதிலடியாக பொலிஸார் மீது மாக்டெய்ல் போத்தல்களில் தீயைப் பற்ற வைத்து போராட்டக்காரர்கள் வீசினர். இதில் செய்தியாளர் ஒருவர் மீது திடீரென தீப்பற்றியதில், அவரது கழுத்தில் தீக்காயம் ஏற்பட்டது.

முகமூடி அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது மிளகு ஸ்பிரே அடித்து, தரையில் கிடத்தி, கைகளை முதுகுப்புறம் வைத்து விலங்கு பூட்டி பொலிஸார் கைது செய்தனர்.

(உ)

# அமெரிக்க – வடகொரியா அணு ஆயுதப் பேச்சுகள்; வெற்றியா? தோல்வியா?

## இரு தரப்புகளும் முரண்பாடான தகவல்கள்



அமெரிக்காவுடனான அணு ஆயுதக் கட்டுப்பாட்டுப் பேச்சு தோல்வியில் முடிந்துள்ளதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவுடனான அணு ஆயுத பேச்சு சுவீடனில் 5 ஆம் திகதி நடைபெறும் என வட கொரியா அண்மையில் அறிவித்தது. அமெரிக்காவும் அதனை உறுதி செய்தது. ஆனால் பேச்சுக்கு ஒப்புக் கொண்ட சில மணி நேரத்துக்குள்ளாக வடகொரியா, நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவுகணையை ஏவி சோதித்தது.

இதனால் இரு தரப்பு பேச்சும் தடைபடும் என எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் திட்டமிட்டபடி அமெரிக்கா மற்றும் வடகொரியா இடையிலான அணு ஆயுத பேச்சு சுவீடன் தலைநகர் ஸ்டாக்ஹோம் அருகே உள்ள லிடின்கோ என்ற தீவில் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த பேச்சில் இருநாட்டு தலைவர்களும் பங்கேற்கவில்லை. அதற்கு பதிலாக, வடகொரியா சார்பில் மூத்த தூதர் கிம் மியோங் கில்லும், அமெரிக்கா சார்பில் வட கொரியாவிற்கான அமெரிக்க சிறப்பு தூதர் ஸ்டீபன் பீகனும் கலந்து கொண்டனர். சில மணி நேரம் இந்தப் பேச்சு நீடித்தது.

எனினும் இந்த பேச்சு தோல்வியில் முடிந்ததாக வட கொரியா தெரிவித்தது. பேச்சுக்கு பிறகு பத்திரிகையாளர்களிடம் பேசிய கிம் மியோங் கில் பேச்சு எங்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றவில்லை. எனவே பேச்சு முறிந்தது. அமெரிக்கா தனது பழைய கண்ணோட்டத்தையும், அணுகு முறையையும் கைவிடவில்லை எனக் கூறினார்.

ஆனால் இதை அமெரிக்கா மறுத்துள்ளது. பேச்சு நல்லபடியாக நடந்ததாக அமெரிக்கா கூறுகிறது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், அமெரிக்கா ஆக்கபூர்வமான யோசனைகளை கொண்டு வந்தது. அதன் மூலம் வடகொரியா வுடன் நல்ல கலந்துரையாடல்களை நடத்தியது எனத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# விண்வெளியில் தனியாக நடக்கும் வீராங்கனைகள்

## வரலாற்றில் முதல் முறையாக சாதனை



சர்வதேச விண்வெளி மையத்தில் இருக்கும் கிரிஸ்டினா மற்றும் ஜெசிகா ஆகிய 2 வீராங்கனைகள் வருகிற 21 ஆம் திகதி வேறு வீரர்கள் துணையின்றி விண்வெளியில் தனியாக நடக்க போகின்றனர் என நாசா அறிவித்துள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் இணைந்து விண்வெளியில் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தை அமைத்துள்ளன. விண்வெளிவீரர்கள் அங்கு தங்கியிருந்து ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இவர்கள் பராமரிப்பு பணிகள் மற்றும் புதிய கட்டுமானப்பணிகளுக்காக சில மணி நேரம் விண்வெளி ஆய்வு மையத்தை விட்டு வெளியே சென்று, விண்வெளியில் நடந்து வேலை செய்வது வழக்கம். இதுவரை இந்தப் பணிகளை பெண்கள் மட்டுமே தனித்துச் செய்ததுமிகிடையாது. அதாவது ஆண் விண்வெளி வீரர்களின் துணையுடன்தான் விண்வெளி வீராங்கனைகள் விண்வெளி ஆய்வு மையத்தை விட்டு வெளியே செல்வது வழக்கம்.

1965 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை 213 வீரர்கள் விண்வெளியில் நடந்து இருக்கிறார்கள். அவர்களோடு ஒப்பிடுகையில் 14 வீராங்கனைகள் மட்டுமே விண்வெளி நடையை மேற்கொண்டிருக்கிறார்கள். அதிலும் அவர்கள், வீரர்களோடு இணைந்துதான் சென்றுள்ளனர். தனியே சென்றதில்லை.

இந்த நிலையில், பெண்களுக்கு பெருமை சேர்க்கும் இந்த வரலாற்று நிகழ்வை வெற்றிகரமாக நடத்தி முடிக்கும் முயற்சியில் 'நாசா' மீண்டும் இறங்கி உள்ளது. அந்த வகையில் சர்வதேச விண்வெளி மையத்தில் இருக்கும் கிரிஸ்டினா கோச் மற்றும் ஜெசிகா மெயிர் ஆகிய 2 வீராங்கனைகள் வருகிற 21 ஆம் திகதி வீரர்கள் துணையின்றி விண்வெளியில் தனியாக நடந்து பராமரிப்பு பணிகளை மேற்கொள்வார்கள் என நாசா அறிவித்துள்ளது.





# வெற்றியைத் தரும் விஜயதசமி நன்னாள்

நம்மை வாழவைக்கும் தெய்வங்களையும் ஆயுதங்களையும் வணங்கும் நாள் ஆயுத பூஜை. கல்விக்கு அதிபதி சரஸ்வதி. ஞானத்தை அருள்பவள் அவளே. அந்த அன்னையை வணங்க நவராத்திரி பண்டிகையின் நவமி நாள் நல்ல நாள்.

அன்றைய தினம் ஆயுதங்களையும் வணங் குகிறோம். நாம் உபயோகப்படுத்தும் பொருள்கள் மட்டுமின்றி மோட்டார் சைக்கிள், கார்,சிறுவர்களின் சைக்கிள்கள் வரை பூஜை போட்டு குதூகலிக்கின்றனர். சரஸ்வதி பூஜையையொட்டி, பூஜையறையில் புத்தகம், பேனா போன்றவற்றை வைத்து, சரஸ்வதி அருளை பெற வழிபடுகின்றோம்.

அதேபோல தீயவை அழிந்து நல்லவை வெற்றி பெற்றதை கொண்டாடும் நாளே விஜய தசமி திருநாளாகும். கல்விக்கு உரிய சரஸ்வதி தேவியையும், செல்வத்துக்கு உரிய லட்சுமி தேவியையும், வீரத்துக்கு உரிய பார்வதி தேவியையும் போற்றி வணங்கும் பண்டிகையாக நாடு முழுவதும் உற்சாகமாகவும் பக்தி பெருக்குடனும் நவராத்திரி பண்டிகை கொண்டாடப்படுகிறது.

முப்பெருந்தேவியரையும் 9 நாள்கள் வழி படுவதே நவராத்திரி. முதல் 3 நாள்கள் சக்திக்கு உரியனவாகவும், அடுத்த 3 நாள்கள் லட்சுமி தேவிக்கு உரியனவாகவும், கடைசி 3 நாள்கள் சரஸ்வதி தேவிக்கு உரியனவாகவும் கொண்டாடப்படுகிறது.

நல்ல நேரம், கெட்ட நேரம் எது என்பதை கோள்களின் நிலைகளை வைத்து பார்த்து, அதற்கேற்ப நல்ல முயற்சிகளை செய்வது மரபு. அதன்படி ஆயுதபூஜை நாளில் வாகனங்களுக்கு பூஜை போடவும், சரஸ்வதி பூஜைக் கான ஆயத்தங்களையும் செய்ய எது நல்ல நேரம் என்று கணிக்கப்பட்டுள்ளது.

**சுவாமி கும்பிட நல்ல நேரம்**

கல்வி, கலைகளில் தேர்ச்சி, ஞானம், நினைவாற்றல் போன்றவை வேண்டி கலைமகளை பிரார்த்திக்கும் திருநாள் சரஸ்வதி பூஜை. கல்வியும் நாம் செய்யும் தொழிலுமே நம்மை வாழ வைக்கும் தெய்வங்கள் என்பதை உணர்ந்து அவற்றையும் கடவுளாக கருதி வழிபடுவதே ஆயுதபூஜையின் ஐதீகம்.

இறைவன் அனைத்திலும் நீக்கமறை நிறைந்திருக்கிறான் என்பதை உணர்த்துவதே இதன் ஐதீகம். இதுவரை தொழில் சிறப்பாக நடந்ததற்கு கடவுளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும் இனி சிறப்பாக நடப்பதற்கு அருள் வேண்டும் வகையிலும் ஆயுதபஜை கொண்டாடப்படுகிறது. நமது பணி, தொழில், வியாபாரத்துக்கு உதவும் கருவிகள், இயந்திரங்கள், கணினி, வரவு – செலவு கணக்குப் புத்தகங்கள் போன்றவற்றுக்கு சந்தனம், குங்குமம் வைத்து, மாலையிட்டு அலுவலகங்களில் பூஜைகள் நடத்தப்படும்.

தொழிலையும் தொழிலாளர்களையும் போற்றும் இப்பண்டிகை காலம் காலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

**நல்லது வெற்றி பெற்ற நாள்**

தீயவை அழிந்து நல்லவை வெற்றி பெற்ற நாளாக விஜயதசமி கொண்டாடப்படுகிறது. மகிஷாசுரனை அழிக்க சாமுண்டீஸ்வரி அவதாரம் எடுத்தாள். 9 நாள்கள் நீடித்த போர், விஜயதசமியன்று முடிவுக்கு வந்தது. தீய சக்தியான மகிஷாசுரனை அன்னை சாமுண்டீஸ்வரி வதம் செய்தாள். நல்ல சக்தியின் வெற்றி திருவிழாவாக விஜயதசமி கொண்டாடப்படுகிறது என்கின்றன புராணங்கள்.

கற்றுக்கொள்ள நல்ல நாள். கல்வி, கலைகள் என இந்நாளில் எது தொடங்கினாலும் ஜெயமாக முடியும் என்பது நம்பிக்கை. மழலை குழந்தைகளை பள்ளியில் சேர்ப்பதற்கும் பாட்டு, இசைக் கருவிகள் பயிற்சி, நடன பயிற்சி, பிறமொழி பயிற்சி, புதிதாக ஒரு தொழிலை கற்றுக் கொள்வது ஆகியவற்றை இந்த நாளில் தொடங்கினால் சரஸ்வதிதேவியின் அருள் பரிபூரணமாக கிடைக்கும்.

அன்றைய தினம் குழந்தைகளின் கை பிடித்து, பரப்பி வைத்திருக்கும் நெல்லில் 'அ' என்று எழுத கற்றுக் கொடுப்பது 'வித்யாரம்பம்' எனப்படுகிறது.

பாண்டவர்கள் வன்னி மரத்தில் தங்களுடைய ஆயுதத்தை மறைத்து வைத்துவிட்டு விராட நகரத்தில் அஞ்ஞானவாசம் செய்தார்கள். இதை அறிந்த துரியோதனன் எப்படியாவது பாண்ட வர்களை வெளியே கொண்டு வர வேண்டும் என்ற எண்ணத்தில் விராட நகரத்தில் இருந்த பசுமாட்டை எல்லாம் சிறைபிடித்தான். இதனால் கோபம் கொண்ட விஜயனான அர்ஜுனன், விராடன் மகன் உத்தரனை முன்னிறுத்திக் கொண்டு வன்னிமர பொந்தில் மறைத்து வைத்திருந்த ஆயுதங்களை எடுத்து கௌரவப்படையை வென்றார்.

தசமி அன்று வென்றதால் ஊர்மக்கள், தசமி அன்று விஜயன் கௌரவப்படையை வீழ்த்தினார். இனி பாண்டவர்களுக்கு வெற்றி தான் என்று பேச ஆரம்பித்தார்கள். அன்றிலிருந்து விஜயதசமி என்ற பெயர் ஏற்பட்டது.

இந்த ஆண்டு விஜயதசமி இன்று 8 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. முதல்நாள் சாமி கும்பிட்டவர்கள் மறு பூஜை செய்ய நல்ல நேரம் காலை 5 மணி முதல் 6 மணிவரை காலை 10.30 மணி முதல் 11 மணிவரை நல்ல நேரம்.

## ஆளுமையை வளர்ப்பதற்கு அமர்ந்தவுன்னைப் போற்றுகிறேன்!



வெள்ளைத் தாமரையில் வீற்றிருக்கும் மாதரசே
உள்ளமதில் நல்லறி ஊற்றெடுக்கச் செய்திடம்மா
கள்ளமற்ற முனிவர்க்கு கருணையினைக் கொடுத்தவளே
கற்றுநான் உயர்வடைய காட்டிவிடு நல்வழியை

ஏடுகையில் ஏந்திநின்று எல்லோர்க்கும் குருவானாய்
இன்னிசைக்கும் வீணையினால் இனியதமிழ் ஈய்கின்றாய்
காடிருக்கும் குயிலினதும் கண்கவரும் கிளியினதும்
கவர்ச்சிமிகு குரலுக்கும் காரணமாய் ஆகிவிட்டாய்

பாமரரின் நாவினிலும் படிப்பறியார் நாவினிலும்
பலவற்றைக் கற்றுநிற்கும் பண்டிதர்கள் நாவினிலும்
ஓடிவந்து அமர்ந்திருந்து உன்னைநீ காட்டுகிறாய்
உனைநினைந்து பார்க்கையிலே உள்ளமெலாம் உருகுதம்மா

இசைவாணர் நாவமர்ந்து எத்தனையோ தருகின்றாய்
இசையறியா மனங்கூட இணங்கிவிடச் செய்கின்றாய்
வசைபாட நினைப்பாரை இசையாலே திருத்துகிறாய்
வகைவகையாய் துதிபாடி வணங்குகிறேன் மாதரசே

கம்பனது நாவினிலும் காளிதாசன் நாவினிலும்
எங்களுக்கு சிலம்புதந்த இளங்கோவின் நாவினிலும்
வாழ்வளிக்கும் வள்ளுவத்தை வழங்கிநின்றார் நாவினிலும்
ஆளுமையை வளர்ப்பதற்கு அமர்ந்தவுன்னைப் போற்றுகிறேன்!

**மகாதேவ ஐயர் ஜெயராம சர்மா,**
**மெல்பேண், ஆஸ்திரேலியா**

## நிம்மதியே நின்பாதம் தாயே !

கல்வியொடு செல்வம் தரவேண்டும் தாயே
கசடகல என்றும் துணைநீயே தாயே
உள்ளமதில் என்றும் உறுதிநிறை தாயே
உன்கமல பாதம் சரணடைந்தேன் தாயே!

வாய்மையுடன் வாழ வரமருள வேண்டும்
வாழும்வரை நோய்கள் வராதிருக்க வேண்டும்
தாழ்வு மனப்பாங்கு தளர்ந்துவிட வேண்டும்
தாயே உன்பாதம் பற்றுகிறேன் நாளும்!

வாதமது செய்யும் மனமகல வேண்டும்
போதைநிறை எண்ணம் பொசுங்கிவிட வேண்டும்
காதலுடன் உன்னைப் பாடிவிட வேண்டும்
கடைக்கண்ணால் என்னைப் பார்த்துவிடு தாயே!

ஆவேசம் கொள்ளுவதை அழித்துவிடு தாயே
ஆசையுடன் அலைவதைநீ அகற்றிவிடு தாயே
நீசரது சகவாசம் நீக்கிடுவிடு தாயே
நிம்மதியே எந்தனக்கு நின்பாதம் தாயே!

# சஜித் பிரேமதாஸவின் ஆட்சியின்போது மலையகத்துக்கு ஜனாதிபதி செயலணி

## அமைச்சர் மனோ கணேசன் உறுதி



கொழும்பு, ஒக். 08

சஜித் பிரேமதாஸவின் ஆட்சியில் மலையக மக்களின் சகல பிரச்சினைகளையும் தீர்க்கக் கூடிய ஜனாதிபதி செயலணி அமைக்கப்படும் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

'சஜித்துடன் நாட்டை வெற்றி கொள்ளும் போராட்டம்' எனும் தொனிப்பொருளில் தமிழ் முற்போக்கு கூட்டணி ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து நடத்தும் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

இன்று வடக்கில் மாத்திரமே ஜனாதிபதி செயலணி ஒன்று உள்ளது. ஆனால் நாங்கள் அவரிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய அவர் அதனை ஏற்றுக்கொண்டுள்ளார்.

இன்று பலர் தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் வேற்றுமைகளை ஏற்படுத்தி அரசியல் செய்ய முயற்சி செய்கிறார்கள். இவற்றையெல்லாம் முறியடித்து நாம் மலையகப் பகுதியில் அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும். அதற்கு சிறந்த தலைவர் சஜித் பிரேமதாஸ தான். எனவே அவரை வெற்றிபெறச் செய்வதற்கு வழி செய்ய வேண்டும்.

எதிர்காலத்தில் மலையகத்தில் வீடமைப்புக்கள் வழங்கும் போது ஒரு வீட்டில் மூன்று நான்கு குடும்பங்கள் இருந்தால் அவர்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனித்தனி வீடுகள் பெற்றுக்கொடுக்கப்படும் – என்றார். (ஐ)

# வேட்பாளர்களுக்கு 4 நிபந்தனைகள்!

## சத்தியக்கடதாசி சமர்ப்பித்தல் கட்டாயம்

கொழுஇம்பு, ஒக். 08

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், நான்கு முக்கியமான விடயங்கள் தொடர்பான சத்தியக் கடதாசியைக் கட்டாயம் சமர்ப்பிக்கவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கட்டுப்பணம் செலுத்திய வேட்பாளர்கள் அனைவருக்கும், தேர்தல்கள் ஆணைக் குழுவினால் நேற்றுமுன்தினம் அறிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாகத் தகவல் வெளியிட்ட தேர்தல்கள் ஆணைக்குழுவின் சட்ட பணிப்பாளர் நிமால் புஞ்சிஹேவ,

அரசமைப்பு விதிகளை மீறக்கூடாது,, எந்தவொரு அரச நிறுவனத்துடனும், வணிகச் செயற்பாடுகளில் ஈடுபடக்கூ.டாது, நெறிமுறைக் கோட்பாடுகளின்படி செயற்படவேண்டும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டு முறைகளைப் பின்பற்றவேண்டும் ஆகிய நான்கு அடிப்படை விடயங்களுக்கும் இணக்கம் தெரிவித்து, வேட்பாளர்கள் சத்தியக்கடதாசிகளை சமர்ப்பிக்க வேண்டும்.

சுதந்திரமான, நியாயமான தேர்தல்களை நடத்துவதே இதன் நோக்கமாகும்.

அத்துடன், வேட்பாளர்கள் தமது சொத்துக்கள் தொடர்பான விவரங்களையும் வேட்புமனுவுடன் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# கோட்டா வென்றாலும் ரணில் தான் பிரதமர்

## கூறுகின்றார் அஜித் பெரேரா



கொழும்பு, ஒக். 08

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றி பெற்றால், ரணில் விக்கிரமசிங்கவே பிரதமராக இருப்பார் என்று ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார். ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐ.தே.கவுக்கு இப்போது எந்த தலைமைத்துவப் பிரச்சினையும் எழவில்லை.

கட்சியின் தற்போதைய தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஐந்து ஆண்டுகளுக்கு – 2024 வரை, தலைவர் பதவியில் இருப்பார்.

இது தொடர்பாக எந்தப் பிரச்சினை ஏற்பட்டாலும், ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பான விவகாரத்தை ஐ.தே.க. எவ்வாறு சுமுகமான முறையில் தீர்த்ததோ அதே வழியில் தீர்ப்போம்.

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றாலும், பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவே நீடிப்பார்.

ஏனென்றால், 19 ஆவது திருத்தச்சட்டத்துக்கு அமைய, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு கொண்டவரே, பிரதமராக இருக்க முடியும்.

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னரே, பிரதமர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

தற்போதைய நாடாளுமன்றத்தை, நான்கரை ஆண்டுகள் பூர்த்தி செய்யும் வரை கலைக்க முடியாது. இந்த நாடாளுமன்றம், 2020 பெப்ரவரி 17ஆம் திகதியே, நான்கரை ஆண்டுகளைப் பூர்த்தி செய்கிறது – என்றார். (ஐ)

# யாழ் மாநகர சபையின் ஏற்பாட்டில் வாணி விழா

யாழ்ப்பாணம், ஒக். 08

யாழ் மாநகர சபையின் சமய விவகார மற்றும் கலை பண்பாடு மேம்பாட்டுக் குழுவினரின் ஏற்பாட்டில் வாணி விழாவும் கலை நிகழ்வுகளும் யாழ் நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ் மாநகர சபையின் சமய விவகார மற்றும் கலை பண்பாடு மேம்பாட்டுக் குழுவின் தலைவரும் யாழ் மாநகரசபையின் உறுப்பினருமாகிய கலைஞர் என்.எம். பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் யாழ் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் கலந்து சிறப்பித்தார். மாநகர சபை உறுப்பினர்கள், யாழ் மாநகர பிரதி ஆணையாளர், நிர்வாக உத்தியோகத்தர், பிரதம பொறியியலாளர், பிரதம கணக்காளர், திணைக்களங்களின் தலைவர்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







காலைக்கதிர் Kalaikathir


# நடப்பு சம்பியன் பட்டத்தை தக்க வைத்தது ரில்கோ அணி



பிரமாண்டமான முறையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற வடக்கு – கிழக்கு பிறீமியர் லீக் தொடரின் இறுதி ஆட்டத்தில் ரில்கோ கொங்கியூரஸ் அணி சம்பியனானது.

தனேஸ் தலைமையிலான ரில்கோ கொங்கியூரஸ் அணியை எதிர்த்து ஞானரூபன் தலைமையிலான வல்வை எவ்.சி அணி மோதியது.

பெருந்திரளான ரசிகர்கள் மத்தியில் ஆரம்பமான இந்தப் போட்டி இறுதி ஆட்டத்திற்கு உரிய விதத்தில் ஆரம்பம் முதல் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது பெற்று கொண்டிருந்த போது ரில்கோ கொங்கியூரஸ் அணியின் நட்சத்திர வீரர் இவான்ஸ் பந்தை கடத்தி சென்று அதை தனேஸிடம் வழங்க அந்தப் பந்தை இலாவகமாக கோலாக மாற்றி வல்வை அணிக்கு அதிர்ச்சி கொடுத்தார் தனேஸ்.

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் தமக்கு கிடைத்த சந்தர்ப்பங்களைக் கோலாக மாற்றத் தவற முதல் பாதி ஆட்டத்தில் 01:00 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது ரில்கோ கொங்கியூரஸ் அணி.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஆட்டத்தை வேகப்படுத்தியது வல்வை எவ்.சி அணி.

இதன் போது எதிரணி முறையற்ற விதமாக வெளிப்படுத்திய ஆட்டத்தின் பயனாகக் கிடைத்த உதையை ஞானரூபன் உதைக்க அப் பந்து ரில்கோ கொங்கியூரஸ் அணியின் கோல் காப்பாளரால் தடுக்கப்பட அருகில் இருந்த வீரர் இக்னி அதனைக் கோலாக மாற்றி ஆட்டத்தைச் சமநிலைப்படுத்தினார்.

தொடர்ந்தும் நடைபெற்ற ஆட்டத்தில் மேலதிக கோல்கள் எதுவும் பெறப்படாத நிலையில் ஆட்டம் 01:01 என சமநிலையில் நிறைவு பெற்றது.

இதனால் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 04:03 என்ற கோல் கணக்கில் ரில்கோ கொங்கியூரஸ் அணி வெற்றி பெற்று இரண்டாவது தடவையாக வட கிழக்கு பிறீமியர் லீக் தொடர் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ஐ)

# நவோமி ஒசாகா சம்பியன்

ரென்னிஸ் இரசிகர்களை குதூகலப்படுத்தி வந்த சீன பகிரங்க ரென்னிஸ் தொடர், முன்னணி வீரர், வீராங்கனைகளின் கைகளை சம்பியன் கிண்ணம் அலங்கரித்தவாறு நிறைவுக்கு வந்துள்ளது.

கடினத் தரையில் நடைபெற்ற இத்தொடரில், ஆண்கள் மற்றும் பெண்கள் என இரண்டு பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன.

இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஒஸ்திரியாவின் டோமினிக் தியேமும், பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஜப்பானின் நவோமி ஒசாகாவும் சம்பியன் பட்டம் வென்றுள்ளனர்.

தற்போது முதலாவதாக ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியின் முடிவினை பார்க்கலாம்,

ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், ஒஸ்திரியாவின் டோமினிக் தியேமும், கிரேக்கத்தின் ஸ்டெபீனோஸ் ஸிட்சிபாஸும் பலப் பரீட்சை நடத்தினர்.

இரசிகர்களுக்கு உச்ச விறுவிறுப்பை பரிசளித்த இப்போட்டியின் முதல் செட்டை 6 –3 என ஸ்டெபீனோஸ் ஸிட்சிபாஸ் கைப்பற்றினார்.

இதனையடுத்து, பதிலடி கொடுக்கும் முனைப்பில் விளையாடிய டோமினிக் தியேம், இரண்டாவது செட்டை போராடி 6 – 4 என கைப்பற்றினார்.

இதன்பிறகு, இருவரும் தலா ஒரு செட்டைக் கைப்பற்றியதால் வெற்றியை தீர்மானிக்கும் மூன்றாவது செட் பரபரப்படைந்தது.

இதில் யாரும் எதிர்பாராத அளவு சிறப்பாக விளையாடிய டோமினிக் தியேம், 6 – 1 என செட்டை எளிதாக கைப்பற்றி சம்பியன் பட்டத்தை வென்றார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், ஜப்பானின் முன்னணி வீராங்கனையான நவோமி ஒசாகாவும், உலகின் முதல்நிலை வீராங்கனையான ஆஸ்ரேலியாவின் ஆஷ்லே பார்டியும் மோதிக்கொண்டனர்.

பரபரப்பாக நகர்ந்த இப்போட்டியில், முதல் செட்டை 6 –3 என ஆஷ்லே பார்டி கைப்பற்றி அசத்தினார்.

இதனைத் தொடர்ந்து, நடைபெற்ற இரண்டாவது செட்டை 6 – 3 என நவோமி ஒசாகா கைப்பற்றி பதிலடி கொடுத்தார்.

இருவரும் தலா 1 செட்டை கைப்பற்றியதால், வெற்றியை தீர்மானிக்கும் மூன்றாவது செட் இரசிகர்கள் மனதில் எதிர்பார்ப்பை எகிற வைத்தது.

மூன்றாவது செட்டில் பெரிதளவான சவாலை எதிர்கொள்ளாத நவோமி ஒசாகா, செட்டை 6-2 என கைப்பற்றி சம்பியன் பட்டத்தை வென்றார்.



# அறிமுக ஆண்டிலேயே சம்பியன் வென்று ஜோகோவிச் அசத்தல்!



ரென்னிஸ் இரசிகர்களை உச்ச விறுவிறுப்பில் ஆழ்த்திய ஆண்களுக்கே உரித்தான ஜப்பான் பகிரங்க ரென்னிஸ் தொடர், இனிதே நிறைவுப் பெற்றுள்ளது.

இதில் தற்போது ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு, இறுதிப் போட்டியில் உலகின் முதல்நிலை டென்னிஸ் வீரரான நோவக் ஜோகோவிச் முதல் முறையாக சம்பியன் பட்டம் வென்று அசத்தியுள்ளார்.

எதிர்பார்ப்பு மிக்க இறுதிப் போட்டியில், செர்பியாவின் முன்னணி வீரரான நோவக் ஜோகோவிச், ஆஸ்திரேலியாவின் ஜோன் மில்மேனை எதிர்கொண்டார்.

இரசிர்களுக்கு உச்ச விறுவிறுப்பை பரிசளித்த இப் போட்டியில், முதல் செட்டை 6 –3 என நோவக் ஜோகோவிச் கைப்பற்றினார். தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில், ஜோகோவிச்சுக்கு ஜோன் மில்மேன், நெருக்கடி கொடுப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் அந்த எதிர்பார்ப்புக்களை தவிடுபொடியாக்கிய ஜோகோவிச், இரண்டாவது செட்டையும் 6 –2 என எளிதாக கைப்பற்றி சம்பியன் கிண்ணத்துக்கு முத்தமிட்டார்.

ஜப்பான் பகிரங்க டென்னிஸ் தொடரில் அறிமுகம் ஆன முதலாவது ஆண்டிலேயே நோவக் ஜோகோவிச் சம்பியன் பட்டம் வென்று அசத்தியுள்ளார். மொத்தத்தில் இது அவரது 76ஆவது சர்வதேச சம்பியன் பட்டமாகும்.

70 நிமிடங்கள் நடந்த இப்போராட்டத்தில் வென்ற ஜோகோவிச்சுக்கு 500 தரவரிசை புள்ளிகளும் 391,430 அமெரிக்க டொலர்கள் பணப்பரிசும், இரண்டாவது இடம்பிடித்த ஜோன் மில்மேனுக்கு 300 தரவரிசை புள்ளிகளும் 196,590 அமெரிக்க டொலர்கள் பணப்பரிசும் கிடைத்தன.

# தங்கக் கையுறையை தனதாக்கிய அமல்ராஜ்




நடப்பாண்டிற்கான வடகிழக்கு பிறீமியர் லீக் தொடரின் சிறந்த கோல்காப்பாளர் விருதை தனதாக்கியுள்ளார் வல்வை எவ்.சி அணி வீரர் அமல்ராஜ்.

சிறந்த கோல்காப்பாளர் விருதை பெறுபவருக்கு தங்க கையுறை வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவர் கடந்த வருடம் நடைபெற்ற தொடரில் 09 கோல்களை மாத்திரமே விட்டுக் கொடுத்திருந்தார் இவர் என்பதோடு அவற்றில் மூன்று கோல்கள் தண்டனை உதை மூலம் பெறப்பட்ட கோல் என்பது மேலும் குறிப்பிடத்தக்க சிறப்பான விடயமாகும்.

# தங்க பந்தை சுவீகரித்தார் தனேஸ்!




நடப்பாண்டுக்கான வடக்கு – கிழக்கு பிறீமியர் லீக்தொடரின் தொடராட்ட நாயகனாகத் தெரிவானார் ரில்கோ கொங்கியூரஸ் அணியின் தலைவர் தனேஸ்.

தொடராட்ட நாயகன் விருதை சுவீகரித்த இவருக்கு தங்கப் பந்து வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும் .

கடந்த ஆண்டு நடைபெற்ற தொடரின் இறுதிப் போட்டியில் ஆட்ட நாயகன் விருதை இவர் சுவீகரித்திருந்ததோடு, அத் தொடரில் அதிகளவான போட்டிகளில் ஆட்ட நாயகன் விருதைச் சுவீகரித்த வீரராக இவர் திகழ்கின்றமை மேலும் குறிப்பிடத்தக்க சிறப்பான விடயமாகும். (ஐ)

# தங்கப் பாதணி விருதை தட்டி சென்ற இவான்ஸ்




மிகபிரமாண்டமானமுறையில் நடைபெற்ற வடக்கு – கிழக்குபிறீமியர்லீக்தொடரின் இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகன் விருதை சுவீகரித்தார் ரில்கோ கொங்கியூரஸ் அணி வீரர் இவான்ஸ்.

ஆட்ட நாயகன் விருதை பெற்ற இவருக்கு தங்கப் பாதணி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இத் தொடரில் அதிகளவான கோல்களை பெற்ற வீரர் இவர் என்பதோடு கடந்த ஆண்டு நடைபெற்ற தொடரில் இவர் தொடராட்ட நாயகன் விருதை சுவீகரித்திருந்தமை மேலும் குறிப்பிடத்தக்க சிறப்பான விடயமாகும். (ஐ)

# காணாமல் ஆக்கப்பட்டோருக்காக பிரிட்டனில் ஒன்றுகூடிய தமிழர்கள்



லண்டன், ஒக். 08

பிரித்தானியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற எமது இனத்தின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சிறார்கள் எங்கே – அவர்களுக்கான நீதி என்ன? என்ற தொனியிலான முக்கிய கவனவீர்ப்புப் போராட்டத்தில், எல்லாப் பிரித்தானிய தமிழ் அரசியல் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் பலரும் ஒன்று கூடினர்.

இது போலவே அனைத்து தனிமனித கர்வங்களையும் தகர்த்து இனவிடுதலைக்காகத் தொடர்ந்து புலத்தில் ஒன்று சேரவேண்டும். குறிப்பாக பிரித்தானியாவில் ஒன்று சேரவேண்டும் என்பதே அனைத்து ஈழத்தமிழ் மக்களினதும் பேரவா ஆகும்.

அதுவே ஆணித்தரமான எமது இனவிடுதலைக்கோரிக்கையை சர்வதேசத்தின் காதுகளுக்கு கொண்டுசேர்க்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை என அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.



# ஜனாதிபதித் தேர்தலைத் தமிழருக்கு சாதகமானதாகப் பயன்படுத்துவோம்

## கிழக்கு பல்கலை. மாணவர் ஒன்றியம் அழைப்பு

மட்டக்களப்பு, ஒக். 08

ஜனாதிபதித் தேர்தலை தமிழர்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது குறித்து ஆராய்வதற்காக ஓரணியில் திரளுமாறு கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: –

இலங்கை நாட்டின் சிறுபான்மையினரான நாம் அரசியல் ரீதியாக எதுவித நலமும் அற்றவர்களாக உள்ளோம். அரசியல் தோற்றத்தில் இருந்தே நாம் அடக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றோம். இதுவரை நாம் என்ன நீதியைப் பெற்றுள்ளோம் என்பது வேதனைக்கும் – வெட்கத்திற்கும் உரியதாகின்றது.

கட்சிகளாய் பிளவுபட்டு, பக்கச்சார்பான அரசியல்வாதிகள் பின்னால் இழுபட்டு இன்று அநாதைகளாகத் தூக்கி வீசப்பட்டுள்ளோம். பிரிவினை கொண்டு நாம் செயற்படுவதால் எந்த பலனுமே இல்லை. ஜனாதிபதித் தேர்தலின் சூடுபிடிப்பில் தமிழர்களைக் கண்டு கொள்வார் யாருமில்லை.

இந்த நிலையில் எமது பலம் என்ன, பலவீனம் என்ன? என்பதை நாம் ஆராய வேண்டும். முடிவெடுக்கும் காலம் ஓடிவிட்டது. முனைப்புடன் முடிவு எடுக்கும் நேரம் எமக்கு நெருங்கி விட்டது.

தேர்தலின் பின் நாம் ஓரங்கட்டப்பட்டுப் போனால் எமக்கான நீதிக்காக நாம் இன்னும் 5 ஆண்டுகள் காத்திருக்கவேண்டுமா? இப்போது முடியாதது இனி எப்போதுமே முடியப்போவதில்லை என்பதே நிதர்சனமான உண்மை.

சிந்தித்து செயலாற்றவேண்டிய நேரம் இது. எனவே இந்த நிலையை கருத்தில் கொண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள சிறப்புக் கூட்டத்தில் அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள் என அனைவரும் கலந்து கொண்டு எமது உயர்வு குறித்து சரியான முடிவைப் பெறுவோம்.

தேர்தலில் எமக்கான சக்தியை நாம் வெளிப்படுத்துவோம். வெற்றி எந்தப் பக்கம் என பரிசீலிப்பது என்பதற்கு அப்பால் நாம் எப்படி இந்த தேர்தலை எமக்கு ஆதரவாகப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறோம் என்பதை அவதானத்துடன் ஆராய வேண்டிய தருணமிது. ஒருமித்த குரலாய் எமது பலத்தை வெளிப்படுத்துவோம் – என்றுள்ளது. (ஐ)




# ரயில் சேவையை நடத்த ராணுவத்துக்கு அனுமதி

## போக்குவரத்து அமைச்சர் வழங்கினார்

கொழும்பு, ஒக். 08

ரயில் இயந்திர இயக்குநர்களாக (சாரதிகள்) இராணுவ அணியை கடமைக்கு அமர்த்தப் போக்குவரத்து அமைச்சர் அனுமதி வழங்கியுள்ளார்.

ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக ஜனாதிபதி பிரகடனப்படுத்திய நிலையில் போக்குவரத்து அமைச்சு இந்த அனுமதியை ரயில்வே பொது முகாமையாளருக்கு வழங்கியுள்ளது.

சம்பள முரண்பாடு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து ரயில் இயந்திர இயக்குநர்கள், கட்டுப்பாட்டாளர்கள், பாதுகாவலர்கள், ரயில் நிலைய அதிபர்கள் தொடர் பணிப்புறக்கணிப்பில் கடந்த 12 நாள்களுக்கு மேலாக ஈடுபட்டுள்ளனர்.

இதனால் ரயில் சேவைகள் முடங்கியமையால் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். (ஐ)

# நாய்களுக்கான விசர் நோய் தடுப்பூசி நாவாந்துறையில் சில இடங்களில்!

யாழ்ப்பாணம், செப். 08

யாழ் மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள யாழ்நகர், பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி (AVR) கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்படவுள்ளது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

வளர்ப்பு நாய்களுக்கான உரிமக் கட்டணமாக 30 ரூபா செலுத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**அந்த வகையில் இன்று 08 ஆம் திகதி -**

* 9.00 மணி முதல் 11.00 வரை – காதி அபூபக்கர் வீதி – நாவாந்துறை.
* 11.00 முதல் 1.00 வரை – சனசமூக நிலையம் கண்ணாபுரம்.
* 2.30 முதல் 4.00 வரை – 1ஆம், 2ஆம் 3ஆம் குறுக்குத்தெரு கண்ணாபுரம்.

**நாளை 09 ஆம் திகதி -**

* 9.00 மணி முதல் 11.00 வரை – கற்குளம் நாவாந்துறை வெள்ளாந்தெரு, நாவாந்துறை.
* 11.00 முதல் 1.00 வரை – சிவன் பண்ணை சீனிவாசகம் வீதி சந்தி.
* 2.30 முதல் 4.00 வரை – கோணந்தோட்டம்.

**எதிர்வரும் 10 ஆம் திகதி -**

* 9.00 மணி முதல் 11.00 வரை – சோலைபுரம்.
* 11.00 முதல் 4.00 வரை – அனைத்துப் பகுதியும் நடமாடும் சேவை.

# வடக்கு வீதிப் பாதுகாப்பு வாரம் நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 08

வடக்கு மாகாணத்தின் பாதுகாப்புக்கு நாங்களும் பொறுப்பு என்ற கருப்பொருளிலான உறுதிமொழி எடுக்கும் வீதிப் பாதுகாப்பு வாரத்தின் ஆரம்ப நிகழ்வு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் நேற்று ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.





வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகள், அரச அலுவலகங்கள், அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் ஆகியவற்றின் பிரதானிகளின் தலைமையில் வடக்கின் அனைத்து மாவட்டங்களிலும் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அத்துடன் வீதிப் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு வட மாகாணத்தின் சகல மாவட்டங்களிலும் அரச அதிபர்கள் தலைமையில் நேற்று திங்கட்கிழமை காலை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த நடைபவனி நிகழ்வு தவிர்க்க முடியாத சில காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளதுடன் இந்த நடைபவனி நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று ஆளுநர் செயலகம் தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள், பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ - 07)



## சொகுசு வாகனத்தில் ஹெரோய்ன் கடத்தல்



கொழும்பு, ஒக். 08

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் அத்துருகிரிய வெளியேற்றப் பகுதியில் சொகுசு வாகனத்துக்குள் ஒரு தொகை ஹெரோய்னுடன் சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நபர்களிடம் இருந்து 50 கிலோ ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவர்களிடம் கைப்பற்றப்பட்ட ஹெரோய்ன் சுமார் 50 கோடி ரூபா மதிப்புள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

## சிவாஜிலிங்கத்துக்கு கொலை அச்சுறுத்தல்



கொழும்பு, ஒக். 08

தொலைபேசி மூலமாகத் தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தேர்தல்கள் செயலகத்தில் நேற்று வேட்புமனுவை தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

கொலை அச்சுறுத்தல் காரணமாக தான் தொலைபேசி இணைப்பை துண்டித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் தான் இருக்கும் இடத்தைக் கண்டறிந்து எச்சரிக்கை விடுத்தால் அதனை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறார் எனவும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## எந்தத் தீவிரவாத சக்திகளுக்கும் நாட்டில் இடமளிக்கமாட்டோம்

### அனுரகுமார திஸநாயக்க கூறுகிறார்

கொழும்பு, ஒக். 08

எவ்வித தீவிரவாத சக்திகளுக்கும் நாட்டில் இடமளிக்கப்போவதில்லை எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

பேருவளைப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பேசிய அவர், இன ரீதியாக இயங்கும் தலைவர்களால் நாட்டு மக்களைப் பாதுகாக்க முடியாது என்றும் கூறினார்.

பாதுகாப்பை உறுதி செய்வதைப் பற்றிப் பேசும் பெரும்பான்மையான தலைவர்கள் இராணுவ வீரர்கள் மற்றும் சோதனைச் சாவடிகளை அமைப்பது தொடர்பாகவே பேசி வருகிறார்கள் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

ஆனால் நாட்டில் இராணுவ இருப்பை அதிகரிக்காமல், நிலையான பாதுகாப்பைத் தேசிய மக்கள் சக்தி உறுதி செய்யும் என அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு எந்தவொரு தீவிரவாத சக்திகளுக்கும் தீவிரவாத செயற்பாடுகளை முன்னெடுக்கும் குழுவும் நாட்டுக்குள் செயல்பட தேசிய மக்கள் சக்தி அனுமதிக்காது என்று அவர் மீண்டும் வலியுறுத்தினார். (ஐ)

## தமிழ்த் தலைமைகள் மௌனம் சாதித்தால் நாம் சிங்களத் தலைமைகளை நாடுவோம்

### செஞ்சோலை வளாகப் பிள்ளைகள் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக். 08

காணி விடயத்தில் தமிழ்த் தலைமைகள் தீர்க்கமான முடிவொன்றை எடுக்காவிட்டால் – மௌனிகளாக இருந்தால் சிங்களத் தலைமைகளிடம் செல்லவேண்டி ஏற்படும் எனச் செஞ்சோலை வளாகத்தில் குடியேறியுள்ள பிள்ளைகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் அமைந்துள்ள செஞ்சோலை காணியில் குடியேறியுள்ள குடும்பங்கள் நேற்று ஊடக சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தன.

இந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு கூறினர்.

இதன்போது கருத்துதெரிவித்த செஞ்சோலை பிள்ளைகள்,

தமிழ் அரசியல் தலைமைகள் காணி விடயத்தில் தீர்க்கமான முடிவு எடுக்காவிடின் சிங்களத் தலைமைகளிடம் செல்ல வேண்டி ஏற்படும்.

இந்தக் காணி விடயம் தொடர்பில் பல்வேறு பிரச்சினைகளை நாம் எதிர் கொள்கின்றோம். இந்தக் காணியை உரிமைகோரும் சிலர் பணம் கொடுத்து பெற்றுக்கொண்டமையை ஒப்புக்கொண்டுள்ளனர்.

மேலும் சிலருக்கு மாற்று காணிகள் வழங்கப்பட்டு வீட்டுத்திட்டமும் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்தக் காணியை அவர்கள் கோருகின்றனர். உண்மையில் இங்கு வளர்ந்தவர்கள் பெற்றோர், உறவினர் அற்றவர்கள்.

இவர்களுக்கெனக் காணி இல்லை. இவர்கள் திருமணமாகிக் கணவரில் தங்கி உள்ளனர். அவர்கள் சமூக ரீதியான பெரும் சவால்களை எதிர்கொள்கின்றனர். இந்த நிலையை உணர்ந்து செயற்பட வேண்டும் – என்றனர்.

கிளிநொச்சி – மலையாளபுரம் பகுதியில் அமைந்துள்ள செஞ்சோலை காணியில், குடியேறியுள்ளவர்களை வெளியேறுமாறு கரைச்சிப் பிரதேச செயலகம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

கடந்த 11.04.2019 அன்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இந்தக் காணியைச் செஞ்சோலையிலிருந்து வளர்ந்து குடும்பங்களாக அங்கு குடியேறியுள்ள மக்களுக்கே பகிர்ந்தளிக்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனினும், இந்தக் காணி தங்களுக்கு உரியதென சுமார் 16 பேர் உரிமை கோரியதுடன் இவ்விடயம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து காணி தொடர்பான ஆவணங்களைப் பரிசோதித்து இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளு மாறு பிரதேசசெயலகத்துக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கலாசாலையில் ஆசிரியர் தின விழா

கோப்பாய், ஒக்.08

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஆசிரிய மாணவர்கள் முன்னெடுத்த ஆசிரிய தின விழா நேற்று திங்கட்கிழமை கலாசாலையில் அமைக்கப்பட்ட விசேட கலையரங்கில் இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் வீ. கருணலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவனும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர் இ. சிவரூபன் மற்றும் கோப்பாய் நவ மங்கை நிவாச நிறுவுநர் சுவர்ணா நவரட்ணமும் கலந்து கொண்டனர்.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.10.2019 இல் வெளியிடப்பெற்றது.